திராவிடநாடு

28–8–60 | வார வெளியீடு

# விடுதலை பெறுவோம்

—[ம. முகமது மைதீன்]—

விழிகளை இழந்தால் வேறோர்
வழிவகை செய்து கொள்வோம்
கலைதனை இழந்தால் மீண்டும்
கலைபெற வழிகள் காண்போம்
பழிகளைக் கண்டால் துன்பப்
பட்டதைத் தாங்கிக் கொள்வோம்
தளைதனை ஒடிக்கவே நாளும்
வழிவகை வகுத்தே நிற்போம்

முத்தமி ழினமே மாற்றார்
மொய்த்ததால் வீழ்ந்த தென்று
இத்தரை போற்றும் தூய
இலக்கியம் துலக்கி நிற்க
மெத்தவும் நொந்து வேதனைச்
சேற்றினில் வீழ்வ தற்கோ
புத்தறி வுடைய நாமும்
பூவிடைப் பிறந்தோம்; இல்லை!

இழந்ததைப் பெறவும் இல்லா
தொழிந்ததைப் பெறவும் மற்ற
வளங்களைப் பெறவும் அல்லால்
வாட நாம் பிறக்க வில்லை
களம்பல கண்ட வீரர்
கருவினி லுதித்திட் டோரே
விளக்கவா வேண்டும் நாட்டின்
விடுதலை இன்றே பெறுவோம்

# கேவலம் ஒரு காலணா!

—பழநி—

இரா. மாணிக்கம்

இரயில் வண்டி, நிலையத்தை விட்டுப் பெருமூச்சு விட்டபடி தன் பிரயாணத்தைத் துவக்கியது அவசர அவசரமாக ஓடிவந்த சிறுவன் ஒருவன், தான் முன்பே பார்த்து வைத்த கூட்டம் நிறைந்த அந்தப் பெட்டியைத் தவறவிடாமல் குரங்குக் குட்டிபோல் தொத்திக்கொண்டு உள்ளே வந்தான். பத்து வயதுதான் அவனுக்கு ஆகியிருக்கும். ஆனால் அந்த வயதுக்கேற்ற வனப்பு அவன் உடலில் துளியளவுமில்லை. அவன் அணிந்துகொண்டிருந்த கந்தல் துணிகள் அவனது வாடி வதங்கிப்போன உடலை — அதற்கு உருவம் கொடுத்துக் கொண்டிருக்கும் எலும்புக்கூட்டை அப்படியே படம் பிடித்துக்காட்டின. இளமையின் மதமதப்போடு ஒளிர வேண்டிய அவன் விழிகள் குழி விழுந்து வெளிறிப்போய் இருண்டு கிடந்தன. புழுதியில் குளித்த அவனுடைய உடல் — தலைமயிர் யாவும் அழுக்குப் பிசுக்கேறிக் குடலைப் புரட்டும் நாற்றத்தைப் பரப்பின. மொத்தத்தில் எவ்வளவுதான் திறமையோடு ஒரு ஒப்பனைக் கலைஞன் பிச்சைக்காரச் சிறுவன் ஒருவனை வடித்திருந்தாலும், இவனைப்போல் இயற்கையாக நிச்சயமாக இருக்காது. வறுமையின் கோர தாண்டவம் அவ்வளவு குறைவின்றி அந்தப் பிச்சைக்காரச் சிறுவனுக்கு 'அநுக்கிரக'மாகியிருந்தது.

வெளிநாட்டார்களுக்கு நாம் எதை எதையோ காட்டுகிறோமே; இந்த வேஷம் போடாத — அதுவும் இளம் பிச்சைக்காரர்களைக் காட்டினாலென்ன? இவர்களும் அவர்களுக்கு அதிசயமாகத்தானே காட்சியளிப்பார்கள்! ஆனால் இந்த நாட்டில் நடப்பதென்ன தெரியுமா? யாராவது வெளிநாட்டார்களோ அல்லது உள்நாட்டிலுள்ள பெரிய மனிதர்களோ பவனி வந்தால் இப்படிப்பட்ட பிச்சைக்காரர்களையும், இவர்கள் பட்டியலில் இடம்பெறும் ஏனைய குருடர் முடவர்களையும், எங்காவது கொண்டுபோய் மறைத்துவிடுகிறார்களே! அது கிடக்கட்டும். அதுஒரு பெரிய பிரச்சினை — ஆளவந்தார்கள் மிகவும் திறமையோடு மூடிமறைக்கும் அரசியல் பிரச்சினை...!

உள்ளே வந்த சிறுவன் மருட்சியோடு சிறிது நேரம் கதவின் பக்கமே நோக்கியிருந்தான். அவன் எதிர்பார்த்த நபர் — பரிசோதகர் வரவில்லை. எனவே அவன் முகத்தில் கொஞ்சம் அமைதியின் நிழல் இலேசாகப் பரவிநின்றது. வறண்ட தன் விழிகளால் பெட்டியில் உள்ளவர்களை மேலோட்டமாகப் பார்வையிட்ட அந்தச் சிறுவன், தன் நோக்கத்தை நிறைவேற்ற ஆயத்தமானான்.

இந்த உலகம் பலனைப் பெற்றுத்தான்-எதிர்பார்த்துத்தான் உதவி செய்கிறது என்பதைச் சிறுவன் நன்கு அறிந்திருக்கிறான் போலிருக்கிறது. ஆகவே அவன் யாரிடமும் முதலில் கையேந்தவில்லை. அவன் கேட்ட சினிமாப் பாட்டுகளில் தெரிந்த அடிகளை மாத்திரம் பிய்த்தெடுத்து இராக ஆலாபனையோடு பாடினான். இரண்டு நிமிடந்தான் அவனது உயிர்ப்பற்ற கட்டைக் குரல் ஒலித்திருக்கும். அதற்குள் சுமார் பத்துப் பாட்டுகளைக் கொலை செய்துவிட்டான். பாவம்! அவனுடைய வறுமைக் கோலத்திற்குக் கட்டியங் கூறுவது போலவே அவனது குரல் பஞ்சையாய் இசைத்தது. உட்கார்ந்திருந்த பலரும் அவனைக் கேலியும் கிண்டலும் செய்தனர்.

அதையெல்லாம் அவன் இலட்சியம் செய்யாமல் அடுத்த படலத்தை ஆரம்பித்தான். கஷ்டமென்பதையே உணராமல், புத்தகமும் கையுமாக இருக்கவேண்டிய அவன், வறுமையின் விளையாட்டால் பிச்சைக்காகக் கும்பிட்டுக் கைநீட்டி நின்றான். அறிவியல் நூல்களை ஆவலோடு படித்துச் சிறக்கவேண்டிய அவனது வாய், தன் இல்லாமையைக் கூறி இயன்றதை உதவுங்கள் என்று வேண்டியது. இந்த நாட்டின் முடிசூடா மன்னன் பசிப்பிணிக்கு இலக்காகி அரற்றினான்.

சிறுவன் வரிசைக்கிரமமாக ஒவ்வொருவரையும் 'பேட்டி' கண்டு 'ஐயா! பசி தாங்கமுடியவில்லை. ஒரு காலணாக் கொடுங்கய்யா." "சாமி! இரண்டு நாளாகப் பட்டினி. காலணாக் கொடுத்து உதவுங்க." "ஐயா! தாய் தந்தையில்லாத் திக்கற்றவனுங்க; ஏதாவது மனது வைத்துக் கொடுங்கையா. உங்களுக்குப் புண்ணியமுண்டு." என்று பலவாறு தன் அவல நிலையை மொழிந்து, நீட்டிய கரத்தை மடக்காமல் பெட்டியை ஒரு வட்டம் வந்தான்.

அவனுக்குக் கிடைத்தது; அதுவும் நிறையக் கிடைத்தது, என்ன! கூசாமல் கூறப்படுகின்ற இழிசொற்கள்தான். ஒருவர் "சேச்சே! இந்தப் பிச்சைக்காரர்களின் 'நியூசன்ஸ்' இரயிலில்கூடப் படை

(15-ம் பக்கம் பார்க்க)

காஞ்சீபுரம்

28 8-60.

தம்பி !

விரைவிலே நீ, காண இருக்கும் தமிழ்ப்படம் ஒன்றினை, சென்ற கிழமை நான் காணும் வாய்ப்பினை படப்பிடிப்பாளர்கள் ஏற்படுத்தித் தந்தனர்—படம், தம்பி இராஜேந்திரன் நடிக்கும், 'தங்கரத்தினம்'

துவக்கத்திலே ஒரு காட்சி. இயற்கை எழில் குலுங்கும் சிற்றூரின் மருங்கு. பச்சைப் பட்டாடை அணிந்த நிலமகள்! அவளுடன் வண்ணத்தில் போட்டியிடும் எண்ணத்துடனே என்னவோ, விண்ணழகி, நீலநிற ஆடையினை நேர்த்தியாக அணிந்துகொண்டிருந்தாள். கனி குலுங்கும் மரங்கள், பூ உதிர்க்கும் செடிகள், கோலமளிக்கும் கொடிகள், வழிநெடுக. நாலைந்து கன்னியர், இரட்டைமாட்டு வண்டியிலே செல்கிறார்கள்—ஓட்டுபவள், கள்ளங்கபடமற்ற இளமங்கை!

என்ன அண்ணா! காட்சியிலே, என்ன இருக்கிறது; புதுமையாக, வயலையும் வாவியையும், வட்டமிடும் வானம்பாடிகளையும் வளைந்தோடும் அருவிகளையும், இப்போதெல்லாம் எந்தப் படக்காட்சியிலும் காண முடிகிறதே!—என்று கூற எண்ணுகிறாய். உண்மை, தம்பி! உண்மை! கண்களுக்குக் குளிர்ச்சி தரும் வண்ணமிகு வெளிப்புறக் காட்சிகளை இப்போது, நிரம்பக் காணுகிறோம். ஆனால் என் மனதை ஈர்த்தது, கண்கண்ட காட்சி அல்ல—கருத்தைத் தொட்டிடும் வகையிலே, நான் கேட்ட இசை.

கிராமத்துக் கட்டழகி—விளக்கமாகச் சொல்வதானால், சேரிவாழ் சிங்காரி—தன் தோழிகளுடன், வண்டி ஓட்டிக்கொண்டு போகும்போது, சூழ இருந்த இயற்கைச் செல்வத்தைக் கண்ட மகிழ்ச்சி பொங்கிடும் நிலையில், பாடிய பாடல், கூடச் சென்ற தோழிகளைப் பார்த்தல்ல, நாட்டுமக்களைப்பார்த்தே, பாடுவதுபோலிருந்தது.

இன்னொருவர் தயவெதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

என்பது, பாடலின் எடுப்பு! என் செவியிலே, அந்த 'எடுப்பு' இன்னமும் ஒலித்த வண்ணம் இருக்கிறது.

நம் நாட்டின் இயற்கை வளம், மக்களின் உழைப்புத்திறம், அறிவு மேம்பாடு, இவைபற்றி எல்லாம் அந்தப் பாடலிலே, அழகான 'அடிகள்' உள்ளன; பொருட்சுவை இசை இனிமையுடன் குழைந்துவருகிறது; எனினும், 'எடுப்பு' இருக்கிறதே, அது ஒரு பாடலுக்காக மட்டுமல்ல, நமது நாட்டு மக்கள் எப்போதும் எண்ணிப் பார்த்திட, ஏற்றம் பெற்றிடத் தூண்டிடும் முறையிலே, அமைந்திருக்கிறது.

# ...இந்நாட்டில் வாழ்வதற்கு!

இன்னொருவர் தயவெதற்கு?
இந் நாட்டில் வாழ்வதற்கு!

—இது பாடலின் எடுப்பாக அமைந்திருந்தது, என்றாலும், தம்பி! இச்சகம் பேசியோ, இளித்துக்கிடந்தோ, ஏவல் பல புரிந்தோ, எடுபிடி ஆகியோ, இருந்தால் மட்டுமே, பிழைக்கமுடியும் என்று எண்ணிக் கிடக்கிறார்களே, சிலர், அவர்கள் ஒரு நாள் ஒருபொழுதாகிலும், தம்மைத்தாமே கேட்டுக்கொள்ளவேண்டும்,

இன்னொருவர் தயவெதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!—என்று.

இன்னொருவர் தயவை மட்டும் தேடினா, தாள் தொட்டுக் கிடந்தன்றோ, வாழமுடியும் என்று, எண்ணிக்கிடக்கின்றனர், இருப்பதை மறந்துவிட்ட இயல்பினர்.

ஏதோ இந்நாடு, பாலைவனமும் பாழ்வெளியும், காடு மேடும், மட்டுமே கொண்டதாக இருப்பது போலவும், இங்கு, விதைத்தால் முளைக்காது, வெட்டினால் ஊற்றுச் சுரக்காது, என்று கூறத்தக்க நிலை இருப்பது போலவும், எதிரிப் படைகள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டு, தாக்கியபடி இருப்பது போலவும், ஓர் மனமயக்கத்தைத் தாமாக ஏற்படுத்திக்கொண்டு, ஓர் 'மேலிடம்' நாடி, அவர் தயவினைத் தேடிப் பெற்று மட்டுமே, வாழ்வினைச் செம்மையாக்கிக் கொள்ள முடியும் என்று எண்ணி, அடிமை மனப்பான்மையினராகி அவதியுறுவதுடன், அந்தப் 'பிச்சைப் பிழைப்பை' இச்சையுடன் ஏற்றுக்கொள்வதுதான் அறிவுடைமை; மறுப்பது மடைமை!—என்றெல்லாம் பேசியும் வருகின்றனரே, அவர்களின் நினைப்புத்தான் வந்தது, பாடலின் எடுப்பைக் கேட்டதும்.

சோம்பித் திரிந்திடாமல், சுறண்டிக்கெடுக்காமல், உழைத்தால் அனைவரும், உண்டு மகிழ்ந்திருக்கத் தக்க அளவு, வளம்கொண்டதாகவே நம்நாடு இருந்திடக் காண்கிறோம்.

கோடிகோடியாகப் பொருளைக்கொட்டிப், புதுப் திட்டங்களைத் தீட்டி நடத்தி, பெருஞ்செல்வத்தை உற்பத்திசெய்து குவித்திடுவோம்—என்று இன்று கூறுகின்றனர். தம்பி! நான் அந்தத் தனிமுயற்சியை மனதில்வைத்துக்கொண்டுகூட அல்ல, உழைப்பைக் குறைத்துப் பொருளைப் பெருக்கித் தரத்தக்க விஞ்ஞானக் கருவிகள், கிடைக்காது போயினுங்கூட, அறிவுத் தெளிவுடன் கூடிய உழைப்பின்மூலம் மட்டுமே, பெறத்தக்க வளமேகூட, இந்நாட்டு மக்களை, நிம்மதியாக வாழ்ந்திடச்செய்திடும் வகையிலும், அளவிலும்: இருப்பதைக் குறிப்பிடுகிறேன். இது இல்லையே! இதற்கு என்ன செய்வோம்? என்று ஏங்கித் தவித்திடும் நிலையில் நாம் இல்லை—நமதுநாடு, போதுமான அளவு, வளம்பெற்றிருக்கிறது. அதனை அறிந்து, அனைவரும் கபடமற்று உழைத்துக், கயமைத்தனத்தைத் தலைகாட்ட ஒட்டாது வெட்டிச் சாய்த்திட்டால், இன்னொருவர் தயவு எதற்கு? இந்நாட்டில் வாழ்வதற்கு? என்று இசைபாடி மட்டுமல்ல, இசைபட வாழ்ந்திடவும் முடியும்.

புத்தம் புதுக்கருவிகள், புதுப்புதுத் திட்டங்கள், இங்கு நிம்மதியான வாழ்க்கையை மட்டுமல்ல, எங்கும் பொன்கொழிக்கும் நிலையை ஏற்படுத்தித்தரும், என்று, திட்டம் தீட்டுவோர் அறிவிக்கின்றனர். அந்த நோக்கத்துடனேயே, இரண்டு திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம், இப்போது மூன்றாவது திட்டம் கருவில் உருவாகி வருகிறது என்றும், கூறிக் களிப்பூட்டுகின்றனர். ஆனால், கவனித்திருப்பாயே, தம்பி! இந்தக் கிழமை, நேருபண்டிதர், பேசியிருப்பதை.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களாலும் பெருகிய செல்வம், எங்கே சென்று தங்கிவிட்டிருக்கிறது, என்பதைக் கண்டறிய வேண்டும். அதற்காக ஒரு தனிக்குழு அமைத்திட வேண்டும்.

பத்து ஆண்டுகள், பாடுபட்டதிலே கிடைத்த பலன், எங்கே இருக்கிறது என்பது, கண்டுபிடிக்கப் பட வேண்டியதாக, தனிக்குழு அமைத்துக் கண்டு பிடிக்கப்படவேண்டியதாக, இருக்கிறது.

திட்டத்தின் வெற்றிக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்! தேடுகிறார்கள், பலன் எங்கே என்று!!

நான், தம்பி! இப்போது அந்ததிட்டங்களை மனதிலே கொண்டு அல்ல, இயற்கை நமக்கு அளித்துள்ள செல்வத்தை மட்டுமே மனதிலே கொண்டுதான், கூறுகிறேன், ஒழுங்கான முறையில், ஒருவரை ஒருவர் அழித்திடும் கெடுமதியின்றி, அனைவரும், உழைத்தால், எவரும், இல்லாமை எனும் நோயால் பீடிக்கப்படாமல், நிம்மதியாக வாழ்ந்திட முடியும்.

*

உலகிலே, பல நாடுகள் உள்ளன — சில நாடுகளிலே சில பகுதிகளும் உள்ளன—இன்னொருவர் தயவு இருந்தால் மட்டுமே வாழ்ந்திட முடியும் என்று கூறத்தக்க நிலையில். வளம் குறைந்தநாடுகள் உள்ளன. குடிவளமற்ற நாடுகள் உள்ளன. இன்றும், வேட்டையாடுதல், மீன்பிடித்தல், இவைகளை மட்டுமே வாழ்க்கைக்கு வழிகளாகக்கொண்ட நாடுகள் உள்ளன. சில இடங்கள் உள்ளன—கதிரவனை வருடத்தில் மூன்று மாதங்கள் மட்டுமே காணமுடியும்! சில நாடுகளிலே, அடிக்கடி, கடல் கொதித்தெழுந்து, படை எடுத்து அழிவை உண்டாக்கிவிடும்!! சில நாடுகளிலே, எப்போதும் மூடுபனி. புல்பூண்டுகூட முளைத்திட முடியாத நிலையிலே பனிப்பாறைகள் நிரம்பிக்கிடக்கும் இடங்களும் உள்ளன. இந்நாடு, பல ஆயிரம் ஆண்டுகளாகவே, இயற்கையின் பேருதவியைப் பெருமளவு பெற்றுத் திகழ்ந்துவந்திருக்கிறது. அந்த வளத்தை, பழம்பெரும் புலவர்களின் பாக்களில் காண்கிறோம். அவர்களின் காலத்திலே, அற்புதம் செய்தளிக்கும் கருவிகள் இல்லை; உண்மை, ஆயினும் வளம் கொஞ்சிக் கிடந்தது; துள்ளிடும் வாளை கண்டனர், புள்ளிமான் கோலம் கண்டனர்; கிள்ளை மொழி கேட்டு இன்புற்றனர்; சந்தன மணம் பெற்று மகிழ்ந்தனர்; கடலிடை முத்தும், கைத்திறனுள்ளோர் செய்தளிக்கும் அணிபணியும் கண்டனர்; பழமுதிர்ச் சோலைகள், பாங்கு நிறை வயல்கள், செங்கரும்புக் கழனிகள், என்ற இன்னோரன்ன வளம்கண்டு பாடினரேயன்றி, வெடித்துக்கிடக்கும் வயல்கள், கொதித்துக் குமுறிடும் கும்பிகள், நெருப்பைக் கக்கிடும் எரிமலைகள், அழிவினை ஏவிடும் நிலநடுக்கங்கள்—எனும் கொடுமைகளைக் கண்டாரில்லை. பன்னெடுங்காலமாகவே, இன்னொருவர் தயவு எதற்கு இந்நாட்டில் வாழ்வதற்கு? என்று பண்பாடியே, வாழ்ந்தனர், தமிழர்.

உண்டிக்கும் உடுத்துவதற்குங்கூட, வழிவகையற்றுப்போய் மற்றவர்களை அண்டிப் பிழைத்திட வேண்டிய, அல்லல் நிரம்பிய நிலையில், நாடுகள் இருந்தன; இருக்கின்றன; பிச்சைப் பிழைப்பு நம் நாட்டு மக்களை, முன்பு, தீண்டினதில்லை. நாடு மட்டுமா, தனி மனிதனை, பிச்சை எடுத்துத்தான் உயிர் வாழ வேண்டும் என்ற நிலை இருக்குமானால், அது எத்துணை வெறுக்கத் தக்கது என்று, நமது ஆன்றோர் கருதினர் என்பதற்குச் சான்றுகளைத் தேடி அலைவானேன்,

இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்

என்றன்றோ, வள்ளுவப் பெருந்தகை கூறினார்.

அப்படிப்பட்ட நாடு, இன்று எதிலாகிலும், தன்னிறைவு பெற்று, இருந்திடக் காண்கிறோமா?

எதிலாகிலும், தன்னிச்சைப்படி நடந்திடும் உரிமை பெற்றிருக்கிறதா, நாடு?

இல்லை! இல்லை! என்பதை, நாம் எடுத்துக்காட்டும், ஆதாரங்களைக்கூடத் தள்ளிவிட்டும், தம்பி! ஒவ்வொன்றுக்கும், நமது அமைச்சர்கள் அளிக்கிறார்களே, பதில்கள், அவைகளைக் கவனித்தாலே, புரிகிறதல்லவா!!

நம் நாட்டிலே, உழவுமுறை எங்ஙனம் இருத்தல் வேண்டும் என்பதிலிருந்து, உரையாடுவது எம்மொழியில், என்பது வரையில், இன்னொருவர் தயவுகூட அல்ல, இன்னொருவரின் கட்டளையை எதிர்பார்த்தல்லவா, நடந்துகொள்ளவேண்டி இருக்கிறது.

துறைமுகங்கள் உள்ளன இங்கே; தூர்ந்து போன நிலையில்; அவைகளைப் பழுது பார்க்கலாமா ஆழப்படுத்தலாமா, என்று யோசிக்கக்கூட, நமக்கு, அங்கிருந்து 'நிபுணர்கள்' தேவைப்படும் நிலையல்லவா, காண்கிறோம்.

தூத்துக்குடித் துறைமுகத்தைப்பற்றிய சோகக்கதைதான், தெரியுமே, தம்பி! உனக்கு. ஓட்டு வேட்டைக்குச் செல்லும்போது, அமைச்சர்கள் பேசும் பேச்சுக்களைக் கவனித்தால், அடே! அப்பா! ஒரே மாதத்திலே, அவர்களே, தூத்துக்குடித் துறைமுகத்தை விரிவுபடுத்தி, சேது சமுத்திர திட்டத்தைச் செயல்படுத்தி, கப்பலே ஓட்டிவிடுவார்கள் என்று எண்ணிடத் தோன்றும்— அவ்வளவு கனிவு, குழைவு, தாராளம், வீரம், விவேகம், ததும்புகின்றன. பொங்கி வழியும் அந்த ஆர்வம், பெட்டியில் விழுந்ததை எண்ணிப் பார்த்ததும், இருக்குமிடம் தெரியாமல் வறண்டுபோயே விடுகிறது. ஏன்? இன்னொருவர் கட்டளைக்குக் காத்துக் கிடக்கவேண்டி இருப்பதால்! இதைச் சொன்னால், இப்போதெல்லாம், நமது மந்திரிமார்களுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது, கோபம் பிறந்து என்ன பலன்? எதிர்க் கட்சிகளைத் தாக்கத்தான், அந்தக் கோபம் பயன்படுமேயன்றி, டில்லிப் பட்டினத்தருகேகூடச் செல்லும், வலிவு இல்லையே அதற்கு!! ஏன்? எதற்கும் டில்லியின் தயவை நாடிக் கிடக்கவேண்டிய, இழி நிலைமை, இவர்களாக ஏற்படுத்திக்கொண்டதனால்! இவர்களின், நெஞ்சுக்கு உரம் ஊட்ட, அறிவுக்குத் தெளிவு கிடைக்கத்தான், நமது கழகம்,

இன்னொருவர் தயவெதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

என்று பண்பாடியபடி இருக்கிறது.

•

தம்பி! சில நாடுகள், இயற்கை வளமற்று, தொழில் திறனுள்ள மக்களற்று இருப்பதால், பேரரசு ஒன்றினுக்கு உட்பட்டு, அடங்கிக் கிடந்து, வாழ்க்கையை நடத்தித் தீரவேண்டியவைகளாகிவிடுகின்றன. வேறு சில நாடுகள், வளம் இருந்தும், அதனைத் தக்க முறையில், பயன்படுத்திக்கொள்ளும் உரிமை பெறாததாலோ, உரிமை பறிக்கப்பட்டுப் போய்விடுவதாலோ, அடிமைக்கோலம் பூண்டு, பேரரசு இடும் பிச்சையை உண்டு வாழவேண்டி நேரிட்டுவிடுகிறது. நம் நாட்டு நிலை, மிக வியப்பானதொன்றாகும். நம் நாட்டு வளம் ஒரு பேரரசுக்கு வளமளிக்கவும், நம் நாட்டுத் தொழில் திறமை, வேறோர் இடத்துக்கு வலிவும் பொலிவும் தேடித் தரவும், பயன்படுத்தப்பட்டு வருகிறது.

நம் நாட்டு இரும்பு, நமக்கு இன்னமும் பயன்படவில்லை; நம் நாட்டுக்கோ, வேற்றிடத்து இரும்பு வருகிறது; அது மட்டுமல்ல வேடிக்கை, அந்த வேற்றிடத்து இரும்பை வெட்டி எடுக்கவும், அதற்கான திட்டமிட்டு செயல்படவும், நம் நாட்டவர் வேற்றிடம் செல்கிறார்கள்!!

நாட்டிலே, காவிரிக்கரையிலே எண்ணெய் கிடைக்கும் என்கிறார்கள் நிபுணர்கள்.

நம் நாட்டுக்கு இப்போது எண்ணெய், வேற்றிடத்திலிருந்து வருகிறது.

அதுமட்டுமல்ல, வேற்றிடத்தில் உள்ள எண்ணெய்த் தொழிலிடங்களில், நம் நாட்டு உழைப்பாளிகளும், நிபுணர்களும், வேலை செய்து வருகிறார்கள்.

சந்தனத்தை அரைத்தெடுத்துக் கொடுக்கிறோம்—சமயத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவன்—மார்பிலே பூசிக்கொள்கிறான், மகிழ்ச்சியுடன்; அரைத்ததால் கையிலே வந்துற்ற 'சுளுக்கு'க்காக ஈரக் களிமண்ணை அப்பிக்கொண்டு, நாம் வேதனைப் படுகிறோம்.

என்ன செய்யலாம்! நாம் வந்த வழி அப்படி!!— என்று பேசிப்புலம்புவர், வழி அறியாதார். அதுபோலன்றோ, ஆளவந்தார்களும் பேசுகின்றனர், என்ன செய்வது? நாம், டில்லியின் தயவை எதிர்பார்த்துத்தான் வாழவேண்டி இருக்கிறது, என்று. என்ன இல்லை இங்கே? ஏன் கை ஏந்திக் கஷ்டப்படுகிறீர்கள்? என்று கேட்டுவிட்டாலோ, உருட்டுகிறார்கள், மிரட்டுகிறார்கள், தம்பி! குத்திக் குடலெடுக்கிறார்கள், கொன்றே போட்டுவிடுகிறார்கள்.

உண்மையிலேயே இந்த நாடு, இன்னொருவர் தயவை நாடினால் மட்டுமே, வாழ முடியும், என்ற விதத்திலே, இருக்குமானால், நீயும் நானும், நமது பக்கம் திரண்டு நிற்கும் நற்பண்பாளரும், ஏன், தனி நாடு, தனி அரசு என்று பேசப்போகிறோம்! நமக்கு என்ன, ஆளவந்தார்களின் அருவருப்பைத் தேடிக்கொள்வதிலே, இலாபமா? சுவையா? தலையாட்டிகளெல்லாம் தர்பாரில் இடம் பெற்றிருப்பதைப் பார்க்கிறோம்; எங்கோ கிடந்தவன் சாமரம்

வீசிப் பங்காளிகளாகிவிடுவதைக் காண்கிறோம்; எதிர்த்துப் பார்த்தோம், பலன் இல்லை; இனி எடுபிடியாகிப் பார்ப்போம், பலன் கேட்போம், என்ற முறையிலே, ஓங்காரச் கூச்சலிட்டு ஒரு காலத்தில் உலவி வந்ததுகளெல்லாம், இன்று புகழ் 'ரீங் காரம்' செய்து, வட்டமிட்டுக் கொண்டிருக்கக் காண்கிறோம்; எனினும், ஆளவந்தாரின் போக்கினை எதிர்த்து இன்னல் வந்துற்றால் ஏற்றுக்கொள்கிறோம். என்ன காரணம்? நமது உள்ளத்தில் ஆட்சி செய்யும் உணர்வு, நம்மை உந்திக்கொண்டிருக்கிறது.

இன்னொருவர் தயவதெற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

என்ற பண், செவியில் கேட்டபடி இருக்கிறது. இந்நாட்டு அருவியின் சல சல ஒலியிலும், செந்நெல் மணிகளின் கல கல ஒலியிலும், இந்தப் பண்தான் கேட்கிறோம். ஓங்கி உயர்ந்த மலைகளும், தேனினைச் சொரிந்திடும் தருக்களும், நமக்கு இந்தப் பண்ணினைத்தான், இசைத்தபடி உள்ளன. அதன் வயப்பட்டு விட்டோம், மற்ற எதுவும், நம்மை மயக்கிடாது; எந்த எதிர்ப்பும் நமது எண்ணத்தை மாய்த்திடாது; உடலைச் சாய்த்திடலாம்; இருட்டு நேரம், முரட்டு ஆள், கூர்மையான கத்தி, நேர்மை மறக்கும் அதிகாரி, இருந்தால் போதும், அதற்கு. ஆனால், எண்ணம், என்றும் இறந்துபடாது! காணும் காட்சிகள், கேட்டிடும் இசை, எல்லாம், அந்த எண்ணத்தை மேலும் வலிவுள்ளதாக்கும்!!

தம்பி! உடன் பிறந்த தங்கைமார் கூடி, நிலாச் சோறு செய்து உண்டு களிப்பர்—கண்டிருக்கக் கூடும். பல்வேறு இல்லங்களின் செல்வங்கள் ஒரு இடத்தில் இருந்து, ஒன்றாகச் சமைத்து. ஒருசேர இருந்து உண்டு, ஆடிப்பாடி மகிழ்வர். எனினும், அந்த 'விளையாட்டு' முடிந்ததும், அவரவர் அவரவர் இல்லம் செல்வர்; பிறகு, உண்பதும் உறங்குவதும் அவரவர் இல்லத்திலேயே.

அதுபோல், வேடிக்கைக்காக அல்ல, காரணத்தோடு, ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக, பல நாட்டவர், பல இனத்தினர் ஒரு இடத்திலிருந்து, ஒன்றுபட்டுக் காரியமாற்றலாம்—காரியமாற்ற வேண்டி நேரிடும். ஆனால் அந்தக் குறிப்பிட்ட காரியம் குறைவின்றி நடந்தேறிய பிறகு, ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு இனமும, தத்தமது எல்லை நின்று, உழைத்து, உயர்ந்து, உயர்வினை உலகுக்கு விரும்பி அளித்து, உலகப் பொதுநலனை வளர்த்திடவே முனைதல் வேண்டும்.

உலகே ஒரு பெரும் நாடு ஆகி—எல்லைக் கோடுகள் அழிக்கப்பட்டு—இன இயல்புகள் நீக்கப்பட்டு—யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்பது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும், நன்னாள் வருமெனின் எவர் குறுக்கே நிற்பர்! ஜெர்மனி, ஜெர்மனி என்ற உணர்வை இழந்து, இத்தாலி தன் தனிப் பெயரை விட்டுக் கொடுத்து, பிரான்சு தன் பண்பு தனியானது என்று பேசுவதை விட்டொழித்து, அதுபோன்றே, அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, இரஷியா ஆகிய எல்லா நாடுகளும், தத்தமது எல்லைகள், இயல்புகள், அரசு முறைகள, வளமூட்டும் வாய்பபுகள் அனைத்தையும் 'தியாகம்' செய்து, 'ஒரே உலகு' ஆகிவிடத் திட்டமிட்டாலும், நாங்கள் மட்டும், 'திராவிடம்' தனி நாடுதான் என்ற திட்டத்தை விடவேமாட்டோம், என்று, எவரும் கூறத் துணியார். ஆனால், 'ஒரே உலகு' என்பதே உயர்ந்த இலட்சியம், எனவே உனக்கென ஒரு நாடு, ஒரு அரசு, வேண்டுமென்று கிளர்ச்சி நடத்தாதே, அது குறுகிய மனப்போக்கு என்று பேசுவது, பேரறிவினைக் காட்டுவதுமாகாது, நேர்மையுமாகாது.

•

'தேசியம்' என்பதுகூட, ஒரு போலித்தத்துவந்தான்! மனிதகுலம் ஒன்றேயன்றி, அதிலே, மஞ்சள், கருப்பு, வெள்ளை, மாநிறம் என்றெல்லாம் குறிப்பிட்டு இது என்நாடு, இது என் அரசு, என்று வாதாடுவது பேதமை, என்றுகூடப் பெரியவர்கள் பேசுகிறார்கள்—சுவை இருக்கிறது பேச்சில்; மறுத்தால், சூடுகூடப் பிறந்துவிடுகிறது; ஆனால் செயல் முறை, எங்ஙனம் இருக்கிறது என்று கவனிக்கும்போதுதான், அந்தப் பெரியவர்கள் பேசுவது, மற்றவர்கள் கேட்டுத், தம்முடைய உரிமையை இழந்திடத் தூண்டவேயொழிய, தமது உரிமையை விட்டுக்கொடுக்க அல்ல என்பது விளக்கமாகத் தெரிகிறது.

•

ஓ. ஹென்றி சுவைமிகு சிறுகதைகள் பல எழுதிப் புகழ் ஈட்டிய, அமெரிக்க எழுத்தாளர். கதைகளில் சுவை என்றால், சொல்லடுக்கால், கட்டுக்கோப்பு முறையால் கிடைத்திடும் சுவைமட்டுமல்ல, கதையிலே இடம்பெற்று, படிப்போரின் நெஞ்சைத் தொட்டிடும் கருத்தால் கிடைத்திடும் தரும் சுவை.

•

ஒரு உணவுவிடுதி! மிகப்பெரியது, புகழ்வாய்ந்தது. எப்போதும் இங்கு ஒரே ஆரவாரம், கூட்டம், குதூகலம். எங்கெங்கிருந்தெல்லாமோ, வருகிறார்கள் இந்த உணவுவிடுதிக்கு.

கூட்டத்திலே சேராமல், ஆனால் அனைவரையும் கூர்ந்து கவனித்தபடி, ஒருவன், இருக்கிறான்—அவன் ஒரு சிந்தனையாளன். அரசியல், பொருளியல், மன இயல், இவைகளைப்பற்றி எல்லாம் நிரம்பத் தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு. இந்த விடுதியிலே பலர் வருகிறார்கள், பலவிஷயங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதற்காகவே வந்திருக்கிறான்.

விந்தையான மனிதர்கள், வேடிக்கையான இடம்! என்று எண்ணியபடி அவன் உட்கார்ந்திருக்கிறான். நடமாடும் விந்தை என்று சொல்லத்தக்கவிதத்தில், ஒருவன், உள்ளே நுழைந்து, ஒரு அதிர்வேட்டுச் சிரிப்பை வீசிவிட்டு, உட்கார இடம்தேடி, ஒதுக்குப்புறமான இடத்தில், தனியாக உட்கார்ந்திருக்கும் சிந்தனையாளனைப் பார்க்கிறான். என்ன எண்ணிக்கொண்டானோ, தெரியவில்லை, நேராக, அதே இடம் வந்து, அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொள்கிறான்.

மயக்கும் பார்வை! இனிக்கும் பேச்சு! அந்த விந்தை மனிதனுக்கு.

"தாங்கள் எந்த ஊரோ?" என்று கேட்டான், சிந்தனையாளன்.

"நானா? நான், நார்வே! அல்லது பலஸ்தீன்! பாரிஸ்!" என்று எதாவது பதில் சொல்லுவான் என்பது, சிந்தனையாளன் நினைப்பு. விந்தை மனிதனோ, உடனே பதில் கூறவில்லை. ஏற இறங்கப் பார்த்து விட்டு, ஏளனம், பச்சாதாபம், வியப்பு, எல்லாம் கலந்த ஒரு புன்னகையைக் காட்டியபடி, "நானா? எந்த ஊர் என்று கேட்கிறாய்! நான், என்ன சொல்ல! என் ஊர், உலகம்!! இப்போது பீகிங் நகரிலிருந்து புறப்பட்டு வருகிறேன்; டமாஸ்கஸ் நகர வியாபாரி ஒருவருக்குக் காஷ்மீர் கம்பளம் தேவை என்று வெனிஸ் நண்பன் கூறக்கேட்டு, இன்றிரவு பக்தாத் கிளம்புகிறேன், அந்த வியாபாரியைக் கண்டு பேச!" என்று பதிலளித்தான்.

ஊர் எது என்று கேட்ட உடன், மளமளவென்று உலகையே ஒரு சுற்றுச் சுற்றி வருகிறானே, என்று, ஆச்சரியம், சிந்தனையாளனுக்கு.

"உலகம், எல்லோருக்கும் பொதுவானது. என்றாலும், அவரவர்களுக்கு என்று ஒரு நாடு, ஒரு ஊர், உண்டு அல்லவா?" என்று கேட்டான் சிந்தனையாளன்.

"இளைஞனே! பொதுவாகப் பலருக்கும் இருக்கும் பித்தம் உனக்கும் இருக்கிறது. என் நாடு, என் ஊர், என்பது, அர்த்தமற்ற பேச்சு!! நாட்டின்மீது பற்று வைப்பது என்ற தத்துவமே, போலி—சொத்தை. மண்ணும் விண்ணும், மரமும் மலரும், குதலைமொழிக் குழந்தையரும் குழல்மொழிக் குமரிகளும், எல்லா இடத்திலும், உலகமெங்கும் உண்டு! இதிலே, ஒரு குறிப்பிட்ட எல்லையை, நாமாக வகுத்துக்கொண்டு, இது எனது நாடு, இதற்கு உலகிலே எங்கும் இல்லை ஈடு, என்று பேசுவது, பேதைமை. ஒரு குறிப்பிட்ட இடத்தின்மீது பற்று இருப்பதாகப் பேசுவதும் பொருத்தமற்றது. எனக்கு இமயமலை பனிமுடி இருக்கும் காட்சியும், இலண்டன் மாநகரம் மூடுபனியில் மூழ்கிக்கிடப்பதும், நைல் நதியின் நேர்த்தியும், நேப்பிள்ஸ் நகர வசீகரமும், பெர்லின் நகரத் தொழிற்சாலையும், பிரான்சு நாட்டு மதுவகையும், மணிபுரி நடனமும் மாட்ரிட் நகர மாட்டுச் சண்டையும், எல்லாமே பிடிக்கும்; எல்லாம் என்னுடையவை என்ற உணர்ச்சிதான் எனக்கு-என் நாடு! அதிலே என் ஊர்! அதிலே என் தெரு! அதிலே நான் பிறந்த வீடு! நான் விளையாடிய மண்மேடு! அங்கு நான் கலைத்தெறிந்த குருவிக்கூடு!—என்றெல்லாம் பேசுவது கிடையாது. நான் மனிதன். இந்த நாட்டுக்காரன்—அந்தநாட்டுக்காரன் என்று, என்னையே நான் மதிப்புக்குறைவாக்கிக் கொள்ளமாட்டேன். என் நாடு உலகம்!! மசூதியும் மாதாகோயிலும், தேரும் திருவிழாவும், உண்டு! இதிலே இதுதான் என்னுடையது, இது என்னுடையது அல்ல என்ற பேத உணர்ச்சி எனக்குக் கிடையாது. நான் சில வேளைகளில், சில இடங்களில் தங்குவேன்—ஆனால் அதிலே இன்ன இடம், என் இடம் என்று கூறி, மற்ற இடங்களை இழந்துவிடுவேனா! மதியற்றவனல்லவா, அப்படிச் செய்வான். நான் அரபிய பாலைவனத்திலே ஒட்டகத்தின் மீது அமர்ந்து செல்வேன், கேரளத்திலே படகேறிச் செல்வேன், டார்ட்டாரியில் குதிரை! இலண்டனில் விமானம்! இரஷியாவில், ரயில்!! — இப்படி!! ஆனால், இதிலே இதுதான் என் நாடு, மற்றவை மற்ற எவரெவருக்கோ, என்று பேசும், பஞ்சப்புத்திக்காரனல்ல நான்! எனக்கு, உலகம், உறைவிடம்! உலகநாதன் என்று என்னை அழைக்கலாம்."

சிந்தனையாளன், வியப்பிலே அமிழ்ந்தே போனான்.

நாடு, நாட்டுப்பற்று, நாட்டுவிடுதலை, அதற்கான போர், அதிலே தியாகங்கள், வீர வரலாறுகள், இவைகளை எல்லாம் படித்துப் படித்து, நெஞ்சு நெக்குருகி இருக்கிறான்—இதோ ஒருவன், தன்னை உலகநாதன் என்று கூறிக்கொள்கிறான்—நாட்டுப்பற்று என்று பேசுவதே சிறுபிள்ளைத்தனம் என்று கேலி செய்கிறான்—இவனல்லவா, தலைசிறந்த தத்துவவாதி—நாட்டுப்பற்று எனும் பாசத்தைக்கூடக் கடந்தவன்!—என்று எண்ணி வியந்தான்.

"என் நாடு இங்கிலாந்து என்று கூறிவிட்டால், உனக்குக் கரித்துண்டு மட்டும்தான் சொந்தமாகும், ஆப்பிரிக்காவிலே உள்ள வைரம், உனக்கு இருக்காது—தமிழ்நாட்டு முத்து உனக்கல்ல, ஆப்கன் நாட்டு பழவகை உனக்கில்லை,..." என்று விந்தை மனிதன் கூறக்கேட்டு, சிந்தனையாளன், இவனே 'இலட்சிய புருஷன்'—இவன் கூறுவதே உண்மையான தத்துவம், தேசியம் என்பதுகூடச் சொத்தை வாதம், நாமும் 'உலகநாதன்' ஆகிவிடவேண்டும், குறுகிய மனப்பான்மை கூடாது, எல்லைக்கோடுகளிலே சிக்கிக் கொள்ளலாகாது, எனறெல்லாம், தீர்மானித்தான்.

உலகநாதன், சிறிது நேரம் இருந்துவிட்டு, விடை பெற்றுக்கொண்டு, கிளம்பினான்.

சிந்தனையாளன், செந்தேன் உண்டவன் போலாகி, அங்கேயே, உட்கார்ந்திருந்தான்.

திடீரென்று, பெருங் கூச்சல் கேட்டது.

ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்வதும், தாறுமாறாகப் பேசிக்கொள்வதும், கேட்டது.

உதைப்பேன்! கொன்றுவிடுவேன்! கட்டுத் தள்ளுவேன்!—என்று கூக்குரல் கிளம்பிற்று.

பரபரப்பு ஏற்பட்டது; அமளி மூண்டுவிட்டது. மேஜைகள், நாற்காலிகள், பறந்தன, உடைந்தன. உண்டு களித்திருந்தோர், மூலைக்கு ஒருவராக ஓடலாயினர்.

பலப்பல நூற்றாண்டுகளாகப், பாவாணர்களும், அரசியல் ஆசிரியர்களும், எழுச்சியூட்டி நிலைநாட்டிய தேசியம்—நாட்டுப்பற்று—என்பதே போலித் தத்துவம், என்ற பேருண்மையை, உலகநாதனின் உன்னதமான விளக்கத்தால் பெற்று பெருமிதம் அடைந்திருக்கும் வேளையில், ஏதோ ஒரு அற்ப விஷயத்துக்காக, இங்கு அமளி செய்கிறார்களே, அறிவற்றவர்கள், பேருண்மையைக் கேட்டறியாப் பித்தர்கள், என்று எண்ணி வெறுப்படைந்தான், சிந்தனையாளன்.

இதற்குள், அமளி பலமாகிவிட்டது. ஒருவன் பலமாகத் தாக்கப்பட்டு, கீழே சாய்ந்தான். அவன் உடலில் பல இடங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

"ஐயோ பாவம்! எவனையோ, பலமாகத் தாக்கி விட்டார்களே!;' என்று முணு முணுத்தபடி, அந்த இடம் நோக்கிச் சென்றான், சிந்தனையாளன். அடிபட்டவனைக் கீழே கிடத்தி இருந்தார்கள். அருகே

சென்று பார்த்தான், திடுக்கிட்டுப் போனான்; அடிபட்டுக் கீழே கிடந்தவன், உலகநாதன்.

"ஐயா! இவரை ஏன் இப்படித் தாக்கினீர்கள்? அமளிக்குக் காரணம் என்ன?" என்று பரிவுடன் சிந்தனையாளன், கேட்டான்.

"பயல், முன்கோபக்காரன். யாரோ ஒருவன், இவனுடைய ஊரிலே சாக்கடை நாற்றம் மூக்கைத் துளைக்கும் என்று சொன்னானாம். ஆஹா! என் ஊரைப்பற்றியா, கேவலமாக இழிவாகப் பேசுகிறாய்? என்று கூவி அவன்மீது பாய்ந்து அடித்தான்; தடுத்தார்கள், அடங்கவில்லை; பிறகு அனைவரும் சேர்ந்து, கொடுத்தார்கள் பலமாக; பயல் கீழே உருண்டான்; இவனுடைய ஊரிலே உள்ள சாக்கடை நாற்றமடிப்பதைச் சொன்னால் கூடவா, கோபம்வருவது! முட்டாள்தனமல்லவா அது!" என்று ஒருவர் விளக்கம் தந்தார்.

உலகநாதனைப் பார்த்தான்—அவன் தன்னிடம், தேசியமே போலி, என்று பேசிய பேச்சை நினைத்துக் கொண்டான்—அவன் ஊரைப்பற்றி யாரோ கேவலமாகப் பேசினதுகேட்டு, இவ்வளவு ஆத்திரம் பிறந்ததே, இவனா, உலகமே என் நாடு! எனக்கு நாடு என்ற எல்லைக்கோடுமீது பற்றுக்கிடையாது! என்று பேசிய, உலகநாதன்!!—என்று நினைத்தான்—மயக்கம்வந்தது சிந்தனையாளனுக்கு.

*

தம்பி! ஓ. ஹென்ரியின், சிறுகதையை, கூடுமான வரையில், புரியவைக்க முயன்றிருக்கிறேன் அதற்கான வடிவம் அமைத்து—அவ்வளவுதான்—அந்த முழுச் சுவையைத் தர இயலவில்லை.

'ஒரே உலகம்' என்று பேசுபவர்களிடம் தமது நாடு தமது ஊர் என்ற உடன், எப்படிப்பட்ட ஆத்திர உணர்ச்சி ஏற்படும், என்பதைக் கதை வடிவாக்கிக் காட்டி, தத்துவம் பேசலாம் தாராளமாக, ஆனால் பற்று, பாசம், அதனால் வரும் எழுச்சி இவைகளைப் போக்கிக்கொள்ள முடியாது என்பதை, அழகாக விளக்கிவிட்டார், ஓ. ஹென்ரி.

*

திராவிடநாடாவது, தமிழ்நாடாவது, இந்தியா ஒரே நாடு, இதிலே என்ன, என் நாடு, என் இனம், என்ற குறுகிய மனப்பான்மை, என்று பேசுகிறவர்களைக் கண்டால், தம்பி! ஓ. ஹென்ரியின் கதையை நினைத்துக்கொள்.

*

நாம், திராவிடம் கேட்கும்போது, பாரதம்—ஒரே இந்தியா—என்றெல்லாம் உபதேசம் செய்கிறார்கள்—பலர்—மேதாவித்தனம் என்ற எண்ணத்தில். அவர்களே, அவர்களின் மாநிலம், அதன் உரிமை, அதன் தொழில் வளம், என்ற பிரச்சினை வந்ததும், தாவிக் குதிக்கிறார்கள், தாறுமாறாகக்கூட நடந்து கொள்கிறார்கள்.

அசாமிலே, இன்னமும் அடங்கவில்லை அமளி.

பஞ்சாபிலே கிளர்ச்சி ஓயவில்லை.

மகாராஷ்டிரம் கிடைத்த பிறகுதான், பம்பாய், ஆமதாபாத் அமளி அடங்கிற்று.

'நாகநாடு' என்று தனி அந்தஸ்தைத் தருகிறோம், ஆண்டொன்றுக்கு மூன்று கோடி ரூபாய், செலவுக்குத் தருகிறோம், இந்தியாவில் ஒரு பகுதி என்ற ஏற்பாட்டுக்காகிலும் இணங்குக, என்று முகவாய்க் கட்டையைப் பிடித்துக்கொண்டு, டில்லி, கெஞ்சுகிறது. பார்க்கிறோம்.

இவர்களேதான், 'திராவிடம்' என்று நாம் பேசும்போது, செச்சே! என்ன பேதைமை! பாரத தேசம் என்று சொல்லுங்கள்!—என்று உபதேசம் பேசுகிறார்கள்—உணவு விடுதியிலே, கண்டோமே, உலகநாதனை, அவனைப்போல.

*

நமக்குவேண்டிய உரிமையின் அருமையை, மற்றவர்கள், புரிந்துகொள்வார்கள், அக்கரை காட்டுவார்கள், ஆதரவு அளிப்பார்கள் என்று எதிர்பார்ப்பதும் தவறுதானே!

நமக்குத்தானே, பிரச்சினை புரியமுடியும். நாம் தான, கேட்டுக்கொள்ளவேண்டும்,

இன்னொருவர் தயவெதற்கு?
இந்நாட்டில் வாழ்வதற்கு!

என்ற கேள்வியை.

அண்ணன்,

அண்ணாதுரை

தலைமைக் கழக அறிக்கை 19/60

## இந்தித் திணிப்புக் கண்டன வாரம்

### 31—8—60 முதல் 6—9—60 வரை

31—8—60-ஆம் நாள் முதல் 6—9—60-ஆம் நாள் வரையுள்ள ஒருவார காலத்தை, இந்தித் திணிப்புக் கண்டன வாரமாகக் கொண்டு, தென்னக மக்களின்மீது இந்தியை மறைமுகமாகவும் நேரடியாகவும் புகுத்தும் ஆட்சியாளர்களின் முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் எதிர்த்துக் கண்டனக்குரல் எழுப்புமாறு நாடெங்கணுமுள்ள கிளைக் கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

தென்னகத்திற்கு இந்தி மொழி தேவையில்லை என்ற கழகத்தின் கொள்கையை விளக்கிக் காட்டியும், ஆட்சியாளர்கள் தந்துள்ள உறுதிமொழிகளை நிறைவேற்றுமாறு வற்புறுத்தியும், அதற்கேற்பவும் தென்னக மக்களின் விருப்பத்திற்கிணங்கவும் அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்கும்படி கோரியும் தீர்மானங்களை நிறைவேற்றி ஆட்சியாளர்களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அமைதியான முறையில் ஊர்வலங்கள் நடத்தியும், பொதுக்கூட்டங்கள் கூட்டியும், கண்டன வாரத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

'அறிவகம்' சென்னை-13,
19—8—1960

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர்
தி. மு. க.

# அந்திக்கலம்பகம்

சி. என். ஏ.

பொன்னி எப்போது வருவா, கதையைத் தொடர்ந்து சொல்லன்னு ஒரே ஆவலா இருக்கு, ஏண்டி ஏமலதா!

ஆமாம்—கதையை அவ சுவாரஸ்யமா ஆரம்பிச்சா, அதுக்குள்ளே தடை ஏற்பட்டுவிட்டது. ஆமாம்! உங்களவர் என்ன கேட்டார்? என்ன வம்பளப்புன்னு கோவிச்சிண்டாரோ?

செச்சே! அவரிடம் அந்த வழக்கமே கிடையாது. பணம் கேட்கும் போதுமட்டும்தான், முகத்திலே எள்ளும் கொள்ளும் வெடிக்கும். மற்றப்படி நாலுபேரோட பேசிண்டிருந்தா, கோபிக்கறது என்கிற சுபாவம் கிடையாது. அவரே கிளறிக்கிளறிக் கேட்பார், உங்க மகாநாட்டிலே என்ன விவாதம் நடந்தது, என்ன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, சொல்லுங்கோ, ஏதாவது, 'ஸ்ட்ரைக்' செய்யப் போகிறீர்களா, என்றெல்லாம் பேசுவார்.

நீ, பித்துக்குளி மாதிரி, நாம பேசிண்டிருந்ததை எல்லாம் உளறிக்கொட்டி விடுவே-ஏண்டி! அப்படித்தானே.

எங்கேடி கவனமிருக்கு, பேசினது முழுதும். பாதிக்குமேலே மறந்துபோயிடுது. கால்வாசிக்குக் கால் தெரிஞ்சா தலைதெரியறதில்லே, தலைதெரிஞ்சா கால் தெரியறதில்லை. பொன்னி சொல்கிறது போல, கோர்வையா, அழகா, நமக்கெங்கே சொல்ல முடியறது.

ஆமாமாம்! பொன்னி நிறையப் படிக்கறா...

படிக்கறதுமட்டுமில்லை; பொதுக் கூட்டங்களுக்கும் போய், கேட்கறா. அதனாலே நிறைய விஷயங்கள் தெரியறது.

தெரிந்த விஷயங்களைப்பற்றி, அவளா வேறே, சிந்திக்கிறா—அதனாலேதான், எதிலேயும் ஒரு தெளிவு இருக்குது, பொன்னிக்கு. ஏன் இன்னும் வரக்காணோம்?

வராமலிருக்கமாட்டா! பொன்னிக்கு, உங்களோட பேசாவிட்டா, தலைவெடிச்சுப் போயிடுமேனனு, எங்களவர்கூடச் சொல்வார்—வேடிக்கையா......

சில வேளையிலே எனக்குச் சந்தேகம் வந்துவிடும், உங்களவர் என்ன இது, நம்ம வீட்டிலே இவாளெல்லாம்



வந்து உட்கார்ந்துண்டு வம்பளக்கருளேன்னு கோபம் ஏற்படுமோன்னு.

அதெல்லாம் தப்பா எண்ணிக் கொள்ளாதே. நாம பேசறதுக்குப் பெயரே, அவர்தான் வைத்தார், தெரியுமோ.

'அந்திக்கலம்பகம்' என்கிற பெயரா?

ஆமாம். கலம்பகம் என்று, பல விஷயங்களை ஒன்றுச் சேர்க்கறதுன்னு அர்த்தமாம்—அந்திங்கறது, மாலை வேளையாம். மாலையிலே நாம கூடி, ஆயிரத்தெட்டு விஷயத்தையும் பேசுகிறோமல்லவா. அதனாலே, அவர், அதற்கு அந்திக் கலம்பகம்னு, பேர் சொல்றார்.

பொன்னிதான்! இருமற சத்தம் கேட்கறதே.

நான் கேட்கணும் கேட்கணும்னு, நினைச்சு நினைச்சு மறந்திண்டே வர்ரேன். நீ, கவனிச்சயோ, கொஞ்ச நாளா, பொன்னி அடிக்கடி இருமிண்டிருக்கா.

ஆமாம். தொண்டையிலே வறட்சி போலத் தெரியறது.

வா, பொன்னி! ஆமா, டாக்டரிடம் காட்டப்படாதோ, இருமிண்டிருக்கறயே......வளரவிடக் கூடாதடியம்மா!

ஏன், என்ன பயம்? எலும்புருக்கி நோயோ என்று!

ஏண்டி பொன்னி, பெரிய பேச்செல்லாம் பேசறே. எலும்புருக்கி நோய் என்கிற பேச்சை எடுத்தாலே திகில்தானடி எனக்கு.

அதெல்லாம் ஒரு பயமும் வேண்டாம். டாக்டரிடம் காட்டினேன்—பயப்படக்கூடிய வியாதி எதுவும் இல்லை என்று தெளிவாகச் சொல்லிவிட்டார்.

முன்பெல்லாம், இந்த எலும்புருக்கி நோய்தான் பொல்லாத ஆபத்து என்பார்கள்—இப்பொ, கான்சர் இருக்காமே புற்றுநோய், அதைக் கண்டுதான் எல்லோருக்கும் பயம்.

புகை கலந்த காற்று. இருக்கும் இடத்திலே இருந்தா, இந்த நோய் வருவதாக, ஒரு பிரபல அமெரிக்க டாக்டர் கூறுகிறார்.

ஏண்டி, பொன்னி! இந்த அமெரிக்காவும் ரஷியாவும் கோடி கோடியாப் பணத்தைக் கொட்டி அழறாளே, அந்தக் குண்டு இந்தக் குண்டுன்னு, பயங்கரமான நோயைப் போக்க, அந்தப் பணத்தைச் செலவழிக்கக் கூடாதோ?

செய்யலாம்—செய்துகொண்டும் வருகிறது, அந்த நாடுகள். ஒரு கணக்குப் பார்த்தேன், ஏதோ பத்திரிகையிலே, நம்ம நாட்டுக்கு மட்டும், மலேரியா காய்ச்சல் இருக்கே அதைப் போக்க கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது, அமெரிக்க அரசாங்கம்.

அதை அல்லவாடி, தர்மம்—புண்ய காரியம்னு சொல்லணும். உலகத்திலே அந்தக் கோடியிலே உள்ளவா, இங்கே உள்ளவாளுக்கு வருகிற நோய்க்கு, மருந்து தேடிக் கொடுக்கிறா, பார்.

ரஷியாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுண்டு, நம்ம நாட்டுக்கு, இப்படிப் பல வகையிலும் உதவிகளைச் செய்துண்டு இருக்கிறதாக, எதையோ, படிச்சு, அவர் கூடச் சொன்னார்.

கடன்கூட நிறையத் தந்திருக்காளாமே?

ஆமாம், வாங்கின கடனுக்கு வட்டிபோட்டு, நம்ம அரசாங்கம் கட்டவேண்டுமே, அடுத்த வருஷத்திலிருந்து! எப்படிக் கட்டப்போகிறதோ...

வாங்கின கடனைக்கொண்டு, என்ன தொழில் நடத்திண்டு வர்ராளோ, அதிலே கிடைக்காதோ, வருமானம்; அந்த வருமானத்திலே இருந்துதான், பணம் மிச்சம் பிடித்து, கடனைக் கட்டணும்...... வேறே வழி...

வேறே யாரிடமாவது, இதற்காகக் கடன் வாங்கறாளோ என்னமோ... யார் கண்டா?

கேட்டுக்கொண்டே இருந்தா, கொடுத்துக்கொண்டே இருக்க முடியுமா — மனம்தான் வருமா? நம்ம நாட்டுத் தொழிலை வளர்த்து, வருமானம் கிடைக்கச் செய்தால்தான் நல்லது. வெளிநாட்டிலிருந்து, கண்ட கண்ட சாமான்களை வரவழைத்து, பணத்தைப் பாழாக்கற பழக்கமும் ஒழிக்கப்பட வேண்டும். இப்போதுகூட, என்னென்ன சாமான்கள், வெளிநாடுகளிலிருந்து வருகின்றன, தெரியுமோ?

இதைச் சொல்லவே, எனக்கு, ஒரு விஷயம் கவனத்துக்கு வர்ரது பிளாஸ்டிக் சாமான்கள், அற்புதமான சாமான்களெல்லாம், நம்ம 'அமுதா ஸ்டோர்'லே வந்திருக்காம்—எல்லாம் புத்தம் புது தினுசுகளாம்.

நான்கூடக் கேள்விப்பட்டேன், நைலான் துணிகள் வந்திருக்காம், வத்சலா! கண்ணைப் பறிக்கிற மாதிரி.

நைலான் துணியும், பிளாஸ்டிக் சாமான்களும், வாங்கி உபயோகப்படுத்தக்கூடாதாம். அதனாலே, உடலிலே ஒரு மாதிரி அரிப்பு, சொறி இதெல்லாம் ஏற்படுகிறதாம்.

பொன்னியைப் பாரேன், பயம் காட்டறா!

எனக்கென்ன, நைலான் விற்பவனிடம் விரோதமா! நான்கூடத்தான் போனமாதம் 50 ரூபாய்க்கு நைலான் வாங்கினேன். டில்லி மந்திரியே பேசினாரே, நைலான், பிளாஸ்டிக் இவைகளாலே, நோய் ஏற்படுவதாக.

அது எந்த மந்திரிடி பொன்னி இந்த ஆராய்ச்சியிலே ஈடுபட்டது.

அவர் வீட்டுப் பொண்டுகள், தொந்தரவு கொடுத்திருப்பா, நைலான் வேணும்னு; அந்தக் கோபத்திலே, எதையோ சொல்லி மிரட்டி இருப்பார்.

வேடிக்கையாப் பேசுகிற விஷயமா இது. டில்லியிலே இருக்கிற சுகாதார மந்திரி, கார்மாகர், பார்லிமெண்டிலே, சொல்லி இருக்கிறார் —பரிகாசத்துக்காகவா பேசுவார்.

அப்படியா! ஏண்டி, பொன்னி உண்மையாக இருக்குமா, அவர் சொல்வது.

டில்லியிலே உள்ள இர்வின் ஆஸ்பத்திரியிலே, இந்த வியாதி வந்தவர்கள் தொகைதான், அதிகமாம்—அவரே பேசியிருக்கிறார்.

என்னமோடி அம்மா! தினுசு தினுசா நோய் ஏற்படுது, விசித்திர விசித்திரமாக் காரணம் சொல்லப்படுது...

குதிரைகளுக்குன்னு ஏதோ ஒரு வியாதி வந்திருக்காமே, தெரியுமோ?

ஆமாம். தென் ஆப்பிரிக்காவிலே இருந்து கிளம்பின நோய்.

குதிரைகளுக்குன்னு, ஒரு நோய் கிளம்பி இருக்கு...?

ஆமாம், ஆயிரம் குதிரைகளுக்குமேல், செத்துவிட்டனவாம்!

பாவம்! வாயில்லாத ஜீவன்கள் என்ன செய்யும்! இப்படி இப்படி வலிக்கிறதேன்னு, சொல்லவா முடியும்.

மனஷாளாலேயே, சொல்ல முடியறதில்லை. முதுகை வலிக்கிறது என்கிறோம் — தைலம் போட்டுத் தேய்ந்தா, வலிபோனால்தானே— பிறகு கழுத்து நரம்பு வலிக்கிற மாதிரி இருக்கு—உடனே அதுக்கு வைத்தியம் — இப்படி இருக்கு, நம்மபாடு! பாவம், குதிரைகளுக்கு நோய் வந்தா, பார்க்கவே கண்றாவியாத்தான் இருக்கும்.

சரி சரி, போதும், நோய் விஷயம். அதையே பேசிண்டிருந்தா, என்னமோ போல இருக்கும்...

நோய்களெல்லாம் நம்ம நாட்டிலே, திருவிழாக் காலங்களிலே, திருவிழா நடக்கிற ஊர்களிலே திடீர்னு, கிளம்பும்...

பார்த்தயாடி, பொன்னி அவளோட சுயமரியாதைப் பேச்சை ஆரம்பித்துவிட்டா...

நான் சொல்வதிலே தப்பு இருந்தா, திருத்துங்க. காலரா பரவுவதே, திருவிழாக் காலத்திலே, தானே...

ஏண்டி, பொன்னி! திருவிழாவுக்குப் போகப்படாதுன்னு அந்தப் பொண்ணுக்கு அவளோட காதலன் சொல்லி அனுப்பினான்னு சொன்னயே, அது இந்தக் காரணத்துக்காகத்தானா?

எந்தப் பொண்ணைப் பத்திக் கேட்கறே?

ஏண்டி ஏமலதா! அதுக்குள்ளே, மறந்துவிட்டயா? பொன்னி, சொன்னாளே, கதை...

ஆமாமாம்......நான் மறந்தே போய்விட்டேன். பொன்னி! நோய் நொடி இடக்கட்டும், நீ, மேலாலே, சொல்லு கதையை.

தங்கத்தாமரை, திருவிழாவுக்குப் புறப்பட்டா. அந்தச் சமயத்திலே, ஒருஆள்வந்தான். கடிதம் கொடுத்தான். நீ, திருவிழாவுக்குப் போகாதேன்னு...ஏன் பொன்னி! அது தானே, நீ சொன்னது.

நல்லா கவனமிருக்குதே உங்களுக்கு. எத்தனையோ பேச்சுப்பேசினோமே, அதிலே, இந்தக் கதை எங்கே, கவனமிருக்கப்போகுது என்றல்லவா, எண்ணிக்கொண்டேன்.

கதையைச் சொல்லாமலே, ஏமாத்தலாம்னு, பார்த்தயா...நான் விடுவனா? எனக்குத்தான், கதை கேட்கறதுன்னா கொள்ளை ஆசையாச்சே.

உனக்குமட்டுமா......நம்ம நாட்டு மக்களுக்கே அப்படித்தான். இல்லாமலா, அவ்வளவு பெரிய 'ராமாயணம்' சொன்னபிறகுகூட, ஒரு உத்தர ராமாயணமும் தேவைப்பட்டது, இந்த நாட்டிலே...

பொன்னி! கதை விஷயத்திலே, மட்டும், எல்லா நாடுகளும் ஒரே விதமான ஆசைதான் இருக்கும். நீ, பொழுதை ஓட்டாதே; கதையைச் சொல்லு, திருவிழாவுக்குப் போகப் புறபபட்டா, தங்கத்தாமரை என்கிற பொண்ணு...

என்ன திருவிழான்னு சொல்லலியே, பொன்னி!

சொல்லட்டுமா...கிரேக்க நாட்டுக் கதை அல்லவா, நான் சொல்வது. பழைய நாட்களிலே, கிரேக்கநாட்டிலே, ஓராயிரம் கடவுள்கள். வீட்டுச்சாமி, நாட்டுச்சாமி, காட்டுச்சாமி, தோட்டத்துக்கு ஒரு தேவதை, குளத்துக்கு ஒரு குட்டித் தேவதை இப்படி உண்டு. எல்லாச் சாமிகளையும், கும்பிடுவது, திருவிழா நடத்துவது, வழக்கம். பணம்தான், கிரேக்கநாட்டிலே நிறையக் குவிந்துகிடந்ததே, பக்திக்காகத் தாராளமாகச் செலவழித்தார்கள். எப்போது பார்த்தாலும், ஏதாது ஒரு திருவிழா இருக்கும்.

தங்கத்தாமரை, புறப்பட்டான்னு சொன்னயே; அது எந்தத் திருவிழா? எந்தத் தெய்வத்துக்கு.

அதுவா? கேட்டு, ஆச்சரியத்தாலே, மூர்ச்சையாகிவிடக்கூடாது அந்தத் திருவிழா குடிகாரர்களின் கடவுளுக்கு!...

என்னது, என்னது...குடிகாரர்களின் கடவுளா. ஏண்டி பொன்னி! என்ன இது, உளறல்...

உளறுவது குளறுவது, உருண்டு கிடப்பது, வயிறு வெடிக்கக் குடிப்பது, கூத்தடிப்பது, இவை எல்லாம், அந்தத் திருவிழாவிலே!! ஆணும் பெண்ணும், கிழவரும் குமரியும், பானத்தைப் பருகி, பாடி ஆடி, 'பக்தி'யைக் காட்டுவார்கள்! ஆடை நெகிழ்ந்துவிடும், அலங்கோலக் கூச்சல் கிளம்பும், ஆள் மாறாட்டம் ஏற்பட்டுவிடும் ஆபாசங்கள் நடந்துவிடும், அந்தத் திருவிழாவில், ஒருவரும், கண்டிக்கமாட்டார்கள்! எல்லாப் பாரத்தையும் தெய்வத்தின் தலையில் தூக்கிப்போட்டு விடுவார்கள்!! அந்தத் திருவிழாவைக் கோலாகலமாக நடத்தாவிட்டால், தெய்வத்தின் சாபம் வந்துவிடும்—தேசமே நாசமாகிவிடும், என்று நம்பினார்கள், கிரேக்க மக்கள்.

ஏண்டி, பொன்னி! வீராதி வீரர்கள்! வெற்றி பல கண்டவர்கள்! வியாபாரத்திலே நிபுணர்கள்! செல்வத்தை நிறையப் பெற்றுக் குவித்தவர்கள், என்றெல்லாம், பாராட்டினாய், கிரேக்கர்களை. அப்படிப்பட்டவர்களுக்கு எப்படி இப்படிப்பட்ட இழிவான திருவிழா, ஏற்பட்டது.

போடி, பைத்யக்காரி! படிப்புக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? படித்தவன், பழனி சென்று மொட்டை அடித்துக்கொள்ளாமல் இருக்கிறானா? பாத பூஜை செய்யாமல் இருக்கிறானா? பால் காவடி எடுக்கிறான்! பண்டரி பஜனை நடத்துகிறான்! உண்டா இல்லையா, சொல்லு.........

உன்னை மறுத்துப் பேசினால், பொன்னி! நீ, மளமளவென்று, இன்னின்னவர்கள் இவ்வளவு இவ்வளவு படித்துவிட்டு, இன்ன இன்ன முறையிலே 'பக்தி'யின் பேராலே, இப்படி இப்படி ஆபாசம் செய்தார்கள் என்று பட்டியலே கொடுத்துவிடுவாய்......... வம்பை, நானாக விலைக்கு வாங்கிக் கொள்ளமாட்டேன். நீ, சொல்லு, மற்றதை...........

பணம் சேரச்சேர, வத்சலா! 'பக்தி'யைக்காட்டிக்கொள்ளவேண்டும் என்று ஒரு ஆசை — பல பேருக்கு. அதைப்போலவே, பணத்தில் பெருத்தவர்கள், பக்திமான்களாகி, பூஜை செய்தார்கள், என்று பெருமையாகச் சொல்லிக் கொள்வதிலே, கோயில் குளத்தை நம்பி வாழ்பவர்களுக்கு, தனி ஆசை! இலாபம் வேறு!! சினிமாக்கார அழகிகளின் படம் போட்டு, இன்ன குமாரி, இன்ன சோப்பு தேய்த்துக்கொள்வது வாடிக்கை! கூந்தல் இவ்வளவு அழகாக இருப்பதற்குக் காரணம், இன்ன தைலம்! இதை இந்த 'நட்சத்திரம்' தேடிப் பெறுவது வழக்கம்!—என்று இப்படி எல்லாம், விளம்பரம் பார்க்கிறோமல்லவா? அதே பெண்கள், நட்சத்திரம் ஆகாத முன்பு, என்ன சோப்பு என்ன தைலம் உபயோகித்தார்கள் என்று யாராவது கேட்டார்களா? கேட்பார்களா? அவர்களாவது சொல்வார்களா! அதே போலத்தான் இதுவும். ஏழை எளியவர்கள், நடுத்தரக் குடும்பத்

தினர், எத்தனையோபேர் வந்து போவார்கள், திருப்பதிக்கு. வெளியே பேசப்படுகிறதா? பேப்பர்களிலே போடப்படுவது உண்டா? கிடையாது! ஆனால் ஒரு சினிமா நட்சத்திரம் போய்வந்தால் என்ன பிரமாதப்படுகிறது, பார்க்கிறோமல்லவா? திருப்பதி சாமிக்கே, புதிய விளம்பரம்!! அந்த 'நட்சத்திரம்' வந்து கும்பிட்டார்!—என்று செய்தியை விளம்பர நோக்கத்துடன் வெளியிடுகிறார்கள். திருப்பதி சாமியின் தரம்கூடக் குறைகிறது — போய்க் கும்பிட்டானே அந்த ஆசாமி பற்றி அல்லவா, புகழ், பாராட்டு, எல்லாம் பேசப்படுகிறது. கிரேக்க நாட்டிலேயும் இப்படித்தான், செல்வம் குவிந்தது, எனவே 'பக்தி' வளர்ந்தது—பக்தியைக் காட்டும் நடவடிக்கைகள்! கோலாகலமான திருவிழாக்களிலே கலந்துகொண்டு, செல்வம் தங்களிடம் குவிந்துகிடக்கிறது என்பதை உலகத்துக்கு, கிரேக்கர்கள் தெரிவித்தார்கள், என்று கூடச் சொல்லலாம்.

இருக்கட்டும். என்னதான் பணம் சேர்ந்தாலும், குடிகாரர்களுக்கு ஒரு கடவுள் என்று கூடவா சொல்லிக்கொண்டு கூத்தாடுவது.

ஆடினார்களே, நான் என்ன செய்ய! அந்த ஆட்டத்தைத்தான் அவர்கள் 'பக்தி' என்றார்கள். அந்தக் கடவுளின் அருளைப் பெற வேண்டுமானால், அப்படி ஆடிப்பாடித் திருவிழா நடத்தவேணடும் என்று, 'வேதங்களை'க் காட்டினார்கள்!!

போடி குறும்புக்காரி! குடிப்பது, பஞ்சமா பாதகங்களிலே ஒன்று...

இருக்கலாம். ஆனால், கிரேக்கர்கள் வழிபட்டு வந்த பல கடவுள்களிலே, 'குடி'க்கு என்றே, ஒரு தனிக் கடவுள் இருந்தார். அவர் பெயர் பேகஸ். அவர்தான், 'மது' செய்யும் விதத்தையே, கண்டுபிடித்து, மக்களுக்குச் சொல்லிக்கொடுத்தாராம். மக்களை, எல்லா விதமான ஆக்கத்தையும் மறந்துவிடச் செய்யும், சக்திவாய்ந்தது 'மது'—அதை மக்களுக்கு நாம் கொடுத்தால், அவர்கள் இன்பம் பெறுவார்கள், என்று எண்ணிய பேகஸ் நாடு நாடாகச் சென்று, 'மது எவ்வளவு தேவை' என்பது பற்றி, பிரசாரமேசெய்துவந்தாராம்.

யார்? கடவுள்! என்னடி இது' கூத்து?

என்னைக் கேட்டால்! நான் கிரேக்கர்களின் புராணத்தில் உள்ளதை அல்லவா, சொல்கிறேன். பேகஸ் சென்ற இடமெல்லாம், வரவேற்பு வைபவம், கொண்டாட்டம், குதூகலம்! அவர் ஏறிச்சென்ற தேர் உருண்டோடி வரும சத்தம் கேட்டதும், ஊர் மக்களெல்லாம், திரண்டு வந்து வரவேற்று, "மது தேவா! வருக! மாந்தர் மனம் மகிழ வழிகாட்டிய கடவுளே! வருக!" என்று பூஜிப்பார்கள்; மது குடித்து ஆடுவர். அதுதான் பூஜை! அந்தப் பூஜை செய்வோருக்கு அவர் வரம் தருவார்! பூஜை செய்ய மறுப்போருக்குச் சாபம்!! அவர், ஏறிவரும் தேருக்கு, குதிரைகள் அல்ல; புலி, சிங்கம் முதலியன பூட்டப்பட்டிருக்குமாம். அனேகமாக ஆடையே இருக்காதாம்!

யாருக்கு? கடவுளுக்கா! நிர்வாணக் கோலமா?

குடிகாரர்களின் நிலை எப்படி இருக்கும் என்பதை விளக்க, அந்தக் கடவுள் அப்படிச் செய்தாரோ, என்னமோ! புராணம் அப்படித்தான் இருக்கிறது. இந்த மதுதேவன் பேகஸ், எப்போதும், தன் வளர்ப்புத் தந்தை சைலீனஸ் எனும் தேவனுடன்தான், உலாவுவானும். இந்த சைலீனஸ் எப்போதும் வெறிவரத்தக்க அளவு குடித்துவிட்டு, கையிலே மதுக்குடத்தை ஏந்திக்கொண்டு, கழுதைமீது உட்கார்ந்துகொண்டு, பேகஸ் வெற்றி உலா வரும்போது வருவது வாடிக்கையாம்..........

இப்போதல்லவா தெரிகிறது' தங்கத் தாமரையை அவளுடைய காதலன், ஏன் திருவிழாவுக்குப் போகக்கூடாது, எனறு கேட்டுக்கொண்டான் என்பது. குடும்பப் பெண்கள், பார்க்கலாமா, கண்ணால், அந்தக் கோணல் சேட்டைகளை.

ஐயயோ! கண் கெட்டுவிடும், கடவுளைக் குறை கூறினால்.........

குடித்துவிட்டு ஆடச்சொல்வதற்கு ஒரு கடவுளா?

இருந்ததே, நான் என்ன பொய்யா சொல்கிறேன்.

கழுதைமேலே சவாரியாம் ஒரு கடவுளுக்கு, புலிவாகனமாம் இன்னொரு கடவுளுக்கு......இதை எல்லாம், எப்படி நம்பினார்கள் கிரேக்கர்கள்?

நம்பாதவன், நரகத்துக்கு இழுத்துச்செல்லப்படுவான் என்று சொல்லிவைத்தார்களே, பூஜாரிகள்!!

பூஜாரிகளுக்குப் புத்தியே கிடையாதா?

யாருக்கு, அவர்களுக்கா! அவர்களுக்கா புத்தி இருக்கிறதா, இல்லையா, :என்று கேட்கிறாய்!! அவர்கள், நிரம்பத் தந்திரம் தெரிந்தவர்கள். சிந்தித்துப்பார்த்து, தெளிவு தேடிக்கொள்ளாதவர்கள் யார் யார்? அவர்களை மருட்ட, மயக்க, என்ன வழி? என்பதை நன்றாக அறிந்தவர்களாயிற்றே, இந்தப் பூஜாரிகள். பணமும் நிறையக் கிடைத்தது, அவர்களுக்கு. செல்வாக்கும் அதிகம். தங்கத்தாமரையைக் காதலித்துவந்தானே, வாலிபன், அவனுடைய தாய்மாமனே, ஒருபூஜாரி. அவன்தான் திருவிழாவிலே, ஆபாசம் நடக்கும், அதிலே உன்னுடைய ஆருயிர்க்காதலியைக் கலந்துகொள்ள அழைத்து வராதே. அவளுடைய பரிசுத்தம் பாழாகிவிடும் — என்று வாலிபனிடம் கூறினான். திருவிழாவிலே நடப்பது அவ்வளவும் 'புரட்டு' என்று கூறினான்.

புரட்டுகளைச் செய்து பிழைத்து வந்த பூஜாரியே இதைச் சொல்வது என்றால் பெரிய ஆச்சரியம் அல்லவா?

உண்மையான காரணம் என்ன என்று தெரியாத முன்பு, பூஜாரியின் போக்கு ஆச்சரியமாகத்தான் தோன்றும். பூஜாரி, திருவிழாவின் புரட்டுகளை எடுத்துச் சொல்லி, ஆபாசங்களை விளக்கிக்கூறி, தங்கத தாமரையைத் திருவிழாவுக்கு அழைத்து வராதே என்று சொன்னது, புரட்டு அம்பலமாகட்டும், பகுத்தறிவு வளரட்டும் என்பதற்காக அல்ல! அவன் அவ்விதம் சொன்னது, முத்தழகிக்காக!!

முத்தழகியா? அவள் யார், முத்தழகி?

அவளா? உன்னோட அக்கா... எழுந்திரு! எழுந்திரு! அவர் வருகிறார்... போய் ஆகவேண்டியதைக் கவனி. கதை கிடக்கட்டும்...

போகிறாள், பாருங்க. நம்ம பொன்னி! நல்ல சுவாரஸ்யமான கட்டத்திலே, கதையை நிறுத்திவிட்டுப்போறா... நீயும் போய்விட்டு வர்ரயா... சரி...

நாளைக்குச் சீக்கிரம் வா பொன்னி! முத்தழகி விஷயம் தெரியவேண்டும்!!

*

# 'வெள்ளி'விழா தந்த 'பொன்'மொழி

மலர் 19 ] ஆண்டுச் சந்தா ரூ. 8. (28—8—60) தனிப் பிரதி 16-காசு [ இதழ் 7

மனிதனுடைய உயிர் இயங்க உணவுதேவை; உணவுகொண்டு உய்ந்து இயங்கும் உயிர் தங்கும் உடலை அழகுபடுத்துவது ஆடை. இவை இரண்டும் மனித நாகரிகத்தின் நாடிகள் எனலாம். இந்த நாடிகள் நமது நாட்டில் தொன்றுதொட்டுப் போற்றப் பட்டு வந்துள்ளன. உழவும் நெசவும் தென்னகத்தில் தனிச் சிறப்போடு விளங்கிவந்தன. ஆனால் இன்று அவை இருக்கும் நிலையோ இரங்கத்தக்கதாக உள்ளது.

'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்ற வள்ளுவரின் வாக்கு, படிக்கும்போது இனிக்கின்றது; விரிவுரை செய்வதாயின் மணிக்கணக்கிலே செய்யலாம். ஆனால் உழவனின் அல்லல் சொல்லுந்தரமன்று. அவன் படும் இன்னலையும் பெறும் பயனையும் ஒப்பிட்டால் புதிதாக யாரும் அத்தொழிலில் ஈடுபட எண்ணமாட்டார்கள். உழவனுக்கு ஏரும் எருதும் மட்டுமே தேவைப்படும் பொருள்கள் என்ற நிலைமாறி, இன்றைய உலகில் வேறு எத்துணையோ கருவிகளும் தேவைப்படுகின்றன. அவற்றையெல்லாம் தேடித் தரும் பெரும் பொறுப்பு அரசிடம் உள்ளது. ஆனால் நமது அரசோ தானே 'ஆலாய்ப்பறந்திடும்' அரசாக உள்ளது. இந்நிலையில் இது உழவனின் உறுதுயர் தீர்ப்பது ஏது?

வீட்டுக் கழிவுப் பொருளையும், தொழுவத்து அழுக்கையும், மரத்துத் தழையையும் மட்டுமே எரு என இட்டுவந்தது மாறி, இன்று அறிவியல் கண்ட புதுமையால் செயற்கையாகவும் எரு உண்டாக்கி அதனைப் பயன்படுத்திப் பலன் காணும் நிலை வாய்த்திருக்கின்றது. இதன் அருமை பெருமைகளைப்பற்றி நமது அமைச்சர்கள் அடிக்கடி பேசுகின்றனர். அதைக்கேட்டு மகிழும் உழவன் கால்கடுக்க நடந்து, 'கடுந்தவம் இயற்றி' அரசினர் அலுவலகத் தலைவரை அணுகி 'உரம்வேண்டும்' என்றால், அவர் உதட்டை மடித்து 'இல்லையே, ஐயா, இன்னும் வரவில்லை என்கிறார். 'எப்போதுவரும்?' என்றுஉழவன் தனது ஆவலை வினவாக்கினால் 'தெரியாது' என்ற ஒரே சொல் விடையாக வருகிறது. அந்த அலுவலர்க்கு மட்டும் அல்ல, அமைச்சர்களுக்கே உரம் எப்போது வரும் என்பது தெரியாது. 'எப்போ வருமோ எசமானர் உத்தரவு!' என்று அவர்களே ஏங்கிக்கிடக்கின்றனர். ஏன்? செயற்கை உரத்தொழிற்சாலைகள் இருப்பது இங்கல்ல — இங்கிருந்து நெடுந்தொலைவில்! அங்கிருக்கும் 'பூசாரிகள்' 'வரம்' தந்தால்தான் இங்கிருக்கும் 'பக்தர்கள்' அந்த உரம்பெற இயலும். ஆனால் அவர்களோ இவர்களை அலட்சியப்படுத்தி, "ஆகட்டும், பார்க்கலாம்" என்று சொல்லிவிடுகிறார்கள். இவர்கள் காத்திருந்து பார்க்கிறார்கள். நெடுநாள் கழித்து 'இவ்வளவு ஒதுக்கியுள்ளோம் உங்களுக்கு' என்று உத்தரவு வருகிறது. இவர்கள் எவ்வளவு தேவையெனக் கேட்கிறார்களோ, அதிலே பாதி அங்கிருந்து கிடைக்கிறது. பாதியை வைத்துக்கொண்டு யாருக்குப் பகிர்ந்தளிப்பார்கள்! நிலை இரங்கத்தக்கதாகிறது! இந்தச் செய்தியினை சென்றகிழமை சட்டமன்றத்தில் அமைச்சரே ஒப்புக்கொண்டுள்ளார்.

கேட்டதில் பாதி இடைக்கிறது; மீதிக்கு என்ன செய்வது!

முக்கிய தொழில்கள் இரண்டு. ஒன்றின் நிலை இது. இன்னொரு தொழில் நெசவு—அது எந்நிலையில் உள்ளது?

'ஆவியன்ன அவிர்நூல் கலிங்கம்' அன்றொரு நாள் தமிழகத்து நெசவுத் தொழிலாளியின் கரத்தில் உருவாயிற்று. இன்றும் அந்தத் திறமை அழிந்துவிடவில்லை.

ஆனால் அவன் வாழ்வோ ஆறுத்துயர்க்கு இடமாகிவிட்டிருக்கிறது. பெற்ற பிள்ளையை விற்றிடும் வேதனை அந்தத் தொழிலில் வந்துற்றது. ஏன்? நெசவாளிக்குப் போட்டியாக ஆலை வந்துற்றது. இவன் குனிந்து நிமிருமுன்னே அந்த ஆலை குன்றெனத் துணியைக் குவித்துவிடுகிறது. நெசவாளியின் நெஞ்சம் அதைக்கண்டு மலைக்கிறது; எனவே, அந்தக் குன்றுடன் இவன் போட்டியிட இயலாமல் குமைந்துவிடுகின்றான். போட்டியிலே தோல்வி இடைக்கிறது. இவனுடைய துயரைத் துடைக்கவேண்டுமானால் இரண்டே வழிகள்தாம் உள்ளன; ஒன்று, எல்லாரும் கைத்தறித் துணிகளையே பயன்படுத்துவது. இதனைக் கழக உறுப்பினர்கள் செய்ய முயல்கின்றனர். இரண்டாவது, ஆலையின் போட்டியைச் சில துறைகளில்—மாதிரிகளில்—தவிர்ப்பது, தடுப்பது. இதனையும் கழகம் வலியுறுத்துகின்றது.

கழகம் மட்டுமல்ல, பலர் இதே கருத்தினை இயம்புகின்றனர். நெசவாளிகள், அவர்களது சங்கங்கள் எல்லாம் இதனை வலியுறுத்தின. மாநில அரசும் இதனை 'அநுதாபத்தோடு' கவனிக்க எண்ணுகின்றது. ஆனால் 'மேலே' இருப்பவர்களுக்கு அத்தகைய அநுதாபம் இல்லை.

ஏன்? என்ன காரணம்? அந்தப் பகுதிக்கு வரும்போதுதான் பலர் 'நமக்கு ஏன் அந்த வம்பு?' என்று ஒதுங்கிவிடுகின்றனர்.

"கைத்தறிக்கு எனச் சில மாதிரிகளை ஒதுக்குவதாயின் ஆலைகள் அந்த மாதிரிகளில் போட்டிக்கு வர இயலாது. ஆலைகளோ வடக்கே இருக்கின்றன. ஆகவே அவர்கள் இந்தத் திட்டத்தை ஒப்புக்கொள்ளவில்லை'' என்று நாம் சொன்னால் "இதிலே கூட வடக்குத் தெற்குப் பேசும் பேத புத்திக்காரர்கள்" என்று சொல்லிவிட்டார்கள்.

கைத்தறி விழாக்களில் நமது கழகத்தவரை அழைத்துப் பேசச் சொல்லுவதுகூட 'பாபம்' என்று நினைத்து ஒதுக்கிவிட்டார்கள்.

நாம் அங்கே செல்லவில்லை; ஆனால் நாம் சொல்லும் உண்மை அங்கே சென்றிருக்கிறது, இபபோது நடைபெறும் கைத்தறிச் சங்க விழாவில்!

சில குறிப்பிட்ட மாதிரிகளைக் கைத்தறிக்கு என ஒதுக்கவேண்டும் எனத் திரு. சோமப்பா அவர்கள் கோரியிருக்கிறார். இவர் யாரோ அல்லர்; அகில இந்தியக் கைத்தறி ஜவுளி வியாபாரக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர். ஆகையால் அவர் கூறுவது கட்சிக் கொள்கையல்ல; கைத்தறிக் கொள்கை!

அதுமட்டுமோ! ஒதுக்க வேண்டும் எனக் கேட்பதோடு அதற்கான வழிகளையும் கூறுகிறார் அவர்.

> "3-வது திட்டத்தில் கைத்தறித் தொழில் வளருவதற்கு அதிக உதவிகள் தேவை என்பதை மத்திய அரசாங்கத்திடம் தென்னிந்திய மாநிலங்கள் கூட்டாக வலியுறுத்த வேண்டும்"

என்று அவர் கூறியுள்ளார். ஏன் தென்னிந்திய மாநிலங்கள் வலியுறுத்த வேண்டும்—அதற்கான காரணத்தையும் அவரே கூறுகின்றார்:

> மொத்தமுள்ள கைத்தறிகளில் 75 சத விகிதம் தென்னிந்தியாவில் இருப்பதால், தென்னிந்திய மாநிலங்கள் நான்கும் கூட்டாகச் சேர்ந்து இதை அவசியம் வலியுறுத்தி நன்மை பெற முயலவேண்டும்"

என்கிறார். இந்தச் சொற்களை ஊன்றிப் பார்த்தால் பல பேருண்மைகள் விளங்கும்.

இதுதான் நிலை. இதனை நாம் சொன்னால் கட்சிக் கருத்து என முகம் கடுக்கின்றவர்கள் இப்போது இது பொதுக் கருத்து என்பதை உணர்ந்தால் போதும்.

தென்னாட்டைப் பொறுத்தவரையில் உழவும் நெசவும்தான், மனிதனுக்கு இரண்டு கண்கள் போன்றுள்ள இரு தொழில்கள், ஆனால், இவை இரண்டுக்குமாவது ஓரளவுக்குப் பாதுகாப்புக் கிடைக்கச்செய்ய நமது மாநில அரசு முயலுமா என்பதை எண்ணும்போது, பரிதாபத்தோடு வாய் மூடிக்கவேண்டியவர்களாகின்றோம். காரணம்: நமது அரசிடம், இப்படியிருப்பதை அப்படி எடுத்துப்போடும் அதிகாரம் கூடக் கிடையாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு அதிகாரம் எல்லாம் அங்கே, டில்லியில் குவிக்கப்பட்டிருக்கிறது. ஏதாவது தேவையென்று கேட்டால், நாம் மேலே எடுத்துக்காட்டியபடி, கேட்டதில் பாதியோ கால்வாசியோதான் கிடைக்கிறது. அப்படிக் கிடைப்பதும் உரிய காலத்தில் கிடைப்பதில்லை.

நமக்குத் தேவையானதை நாமே ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு நமக்கிருக்கிறது; அதனைச் செய்யும் உரிமையை நம்மிடம் விட்டுவிடுங்கள் என்று நாம் கூறினால், பார், பார், இவர்கள் கட்சி பேசுகிறார்கள், பிரிவினை உணர்ச்சியைச் சமயம் பார்த்துக் கிளப்புகிறார்கள் என்று நம் வாயை அடைப்பதில் தங்களுடைய முழுக் கவனத்தையும் பலத்தையும் செலவிடுகின்றார்களேயன்றி, நாட்டின் நலிவைப் போக்க நாம் கூறும் காரணம் சரியா, நியாயமா என்பதை எண்ணியும் பார்ப்பதில்லை.

இந்த நிலையில் திரு. சோமப்பா போன்ற பெரியவர்கள் கூறும் யோசனைகளை நமது அரசாங்கம் ஏற்று ஆவன செய்ய முன்வரும் தைரியத்தைப்பெற வேண்டுமென்பதே எமது விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

டில்லியில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களில் ஒருசிலவற்றையாவது மாநில அரசு தனதாக்கிக் கொள்ளவேண்டும். குறிப்பாக, உழவு, நெசவு, மொழி ஆகியவற்றைப்பற்றியாவது மாநில அரசு, தனது தேவைக்கும் வசதிக்கும் வாழ்வுக்கும் ஏற்ப அமைத்துக்கொள்ளும் அதிகாரத்தை முதலில் பெற முயலட்டும்.

கைத்தறி வெள்ளிவிழாவில் உதிர்க்கப்பட்ட பொன்மொழி உயிர்பெற அப்போதுதான் வழியும் வாய்ப்பும் உண்டாகும்.

"பொன்னித்தீவின்
கன்னித்தெய்வம்"
அடுத்த இதழில்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

யெடுத்திடுச்சே" என்று சலித்துக் கொண்டார். மற்றொருவர் "ஏ, சனியனே! ஏன் இந்தச் சின்ன வயசிலே இப்படியெல்லாம் வேஷம் போட்டுக் கெட்டுப்போறே... போ ...போ... காசுமில்லே கீசுமில்லே" என்றார். அவர் நாடகத்தில் நடிப்பவர் போலிருக்கிறது. அவரது முகவெட்டும் தலைமயிரும் அப்படித்தான் இருந்தன. இன்னொருவர் "இன்னும் எண்ணிப் பத்து வயது கூட ஆகியிருக்காது. அதுக்குள் ளவா சூடு சொரணை அற்றுப் போய்ப் பிச்சை எடுக்க வந்திட்டே. மானங்கெட்ட கழுதே" என்று ஆத்திரத்தோடு கூறினார். அவருடைய தோற்றம், மானம் என்றால் என்ன என்பதை அறியும் ஆற்றல் தனக்கு மட்டுமே உண்டு என்று சொல்வதுபோல் காட்சியளித்தது.

இவ்வாறு ஆளுக்கொரு பாணியில் அவனை அர்ச்சித்துவிட்டுத் தங்களது மேதாவிலாசத்தை எண்ணி மகிழ்வதில் இலயித்துவிட்டார்கள்.

ஒரே ஒரு மனிதர்மாத்திரம் இவர்களுக்கெல்லாம் விதிவிலக்காக, மௌனமாக உட்கார்ந்திருந்தார். அவர் கண்கள் அடிக்கடி அந்தப் பரிதாபமான சிறுவனை இரக்கத்தோடு நோக்கின.

பையன் இதுமாதிரி வசைமொழிகளையெல்லாம் பலமுறை கேட்டு மரத்துப்போன உள்ளத்தைக் கொண்டவன். ஆகவே இதற்கெல்லாம் அவன் சளைத்துச்சோர்ந்துவிடுபவனல்ல. என்றாலும் "ஒருவராவது மனம் இரங்கி ஒருகாலணா—இல்லை. ஒரு பைசாக்கூடக் கொடுக்கவில்லையே" என்று நினைக்கும்போது, அவன் மனம் வெதும்பாமல் போகவில்லை. அவன் கண்களில் இலேசாக நீர் துளிர்த்து நெஞ்சில் தேங்கிக்கிடக்கும் சோகத்தை வெளிப்படுத்தியது. ஏமாற்றத்தின் சாயல் அவன் முகத்தில் விரிந்திருந்தது. சற்றுநேரம் ஒரு மூலையில் உள்ளம் ஒடுங்கி நின்றிருந்தான். ஆனால் அவனது ஒட்டிய வயிற்றின் பிசைவு — சுண்டி இழுக்கும் வன்மை அவனைச் சும்மா இருக்கவிடவில்லை. மீண்டும் ஒரு 'ரவுண்டு' வரும்படி முடுக்கி விரட்டியது.

இப்போது அவன் குரல் முன்னிலும் குறைவாகவே ஒலித்தது. நெஞ்சை நெகிழவைக்கும் உருக்கம் நிறைந்த சொற்களால் கெஞ்சினான். எல்லோர் மனத்தையும் கரைக்க அவன் தன்னுடைய முழு ஆற்றலையும் ஈடாக்கினான். அதனாலேயே யார் மனமும் ஈரமாகிவிடவில்லை. ஆனால் எல்லோர் மனத்திலும் ஒரு மாறுதல் ஏற்படாமலில்லை. "இவன் நம்மிடமிருந்து 'கறக்காமல்' போவதில்லை என்று முடிவுகட்டிவிட்டான்" என்று திட்டவட்டமாக எண்ணிக்கொண்டார்கள்.

பிறகென்ன? ஒருவர் "அபசகுனமே இந்தா" என்று ஒரு காலணாவைச் சிறுவன் கையில் வீசியெறிந்து, தன் மாபெரும் வள்ளல் தன்மையை ஆரம்பித்துவைத்தார். அவர் கொடுத்துவிட்டாரே! நாம் கொடுக்காமல் போனால் என்ன நினைப்பார் என்ற வரட்டுக்கௌரவத்தால் நெட்டித் தள்ளப்பட்ட மனப்பூர்வமான விருப்பமில்லாதவர்கள், முன்னவரின் அடியொற்றிக் குறைந்தபட்ச நிதியை மனமுவந்துகொடுத்தார்கள். அடுத்து இரண்டு மனிதர்கள் உட்காரக்கூடிய இடத்தை, தான் ஒருவரே ஏகபோகமாக ஆக்ரமித்துக்கொண்டிருந்த பெரிய மனிதர் ஒருவர், தன் கனத்த பர்ஸை எடுத்து ஒரு உலுக்கு உலுக்கி இலாவகமாக நயாபைசா ஒன்றைப் பெரிய மனது பண்ணிக் கண்டுபிடித்து எடுத்துக்கொடுத்தார்.

இன்னும் ஒருவரே பாக்கி; அவர்தான் எதிலும் கலக்காமல், ஆனால் எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கும் (முன்பு குறிப்பிட்ட) அந்த மனிதர். அவரிடம் சிறுவன் கிளிப்பிள்ளை போல் தன் அவலத்தை ஒப்புவித்து இறைஞ்சினான். ஆனால் அந்த மனிதர் நெடுமூச்செறிந்து முகத்தில் வேதனையைப் படரவிட்டாரே அன்றி, வாய்திறந்து பேசவுமில்லை. கை நீட்டிக் கொடுக்கவுமில்லை.

சிறுவன் கையிலிருந்த நாணயங்களைக் கண்களால் எண்ணினான். காலணாக்களும் நயாபைசாக்களும் சேர்ந்து ஒன்றே முக்காலணாதான் இருந்தது. "தன்னுடைய மூண்டெழும் பசி நெருப்பை அணைக்கக் குறைந்தது இரண்டு இட்லியாவது வேண்டுமே! அதற்கு இப்போது கையிலிருக்கும் காசு போதாதே" என்று அவன் மனம் பொருமியது. "இவ்வளவு நேரம் நாவரளக் கெஞ்சிக் கூத்தாடியும் இரண்டணாக் காசு கூடக் கிடைக்கவில்லையே. இன்றையபொழுது எப்படிதான் கழியப்போகிறதோ"

சிறுவன் மறுகினான்; பசியின் வேதனை அவனை வாட்டி வதக்கியது. அழுகையே வந்துவிடும் போலிருந்தது. என்றாலும் சமாளித்தபடி "எப்படியும் அவரிடமிருந்து ஒரு காலணாவாவது பெற்றே தீரவேண்டுமென்ற உறுதியோடு மறுபடியும் முற்றுகையிட்டான்.

அந்த மனிதர் முன்பிருந்த மோன நிலையிலேயே—ஆனால் ஒருவித அருள் சுரக்கும் விழிகளோடு வீற்றிருந்தார்.

மற்றவர்களுக்கு இவர் செயல் ஆத்திரத்தை அளித்தது. அதோடு "நாமெல்லாம் கொடுத்துவிட்டோம். இவர்மாத்திரம் ஏய்க்கப் பார்க்கிறாரே" என்ற அரிப்பு வேறு ஒவ்வொருவரையும் அருசை கொள்ளச் செய்தது. ஆகவே, பையனுக்குத் தங்களது மேலான சிபார்சைச் செய்தே ஆகவேண்டுமென்று கங்கணம்கட்டிக்கொண்டார்கள்.

"என்னங்க! ஒரு காலணாத்தான் கொடுத்திடுங்களேன்"

அந்த மனிதரிடம், இதுவரையில்லாத பரிவோடு எல்லோரும் விண்ணப்பித்துக் கொண்டார்கள். தனிப்பட்ட முறையில், ஏகபோகக்காரர்—அவர்தான் அந்த நையா பைசா வள்ளல் "என்னப்பா நாம் எவ்வளவோ செலவு தினமும் செய்யவில்லையா? அதிலே இது என்ன? ஒரு காலணாத்தானே. தொலைச்சிடு" என்று குழைவோடு பேசிச் சிபார்சுக்கு முத்தாய்ப்பு வைத்தார்.

இதுவரை பேசாதிருந்த அந்த மனிதர் மெல்லிய புன்னகையை இதழ்க் கடையில் மின்னவிட்டு மெதுவாக வாயைத் திறந்தார். "நீங்களெல்லாம் என்னிடமிருந்து ஒரு காலணாவை வாங்கிக் கொடுத்துவிட வேண்டுமென்று தானே வரிந்து கட்டிக்கொண்டு இருக்கிறீர்கள்! இல்லையா?"

அவர் குரலில் ஏளனம் இழைந்திருந்தது. அவருடைய கண்களோடு எல்லோருடைய கண்களும் ஒரு முறை சந்தித்து மீண்டன.

"அப்படியெல்லாம் நினைக்காதீர்கள். பையனைப் பார்த்தால் பரி

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... } அலுவலகம் 15 இல்லம் ...118

தாபமா இருக்கு. அதனால்தான் உங்களையும் ஏதாவது உதவச் சொல்றோம்.

குரல்கள் ஒருமித்து ஒலித்தன. இதிலாவது நம்முடைய ஒற்றுமையை காட்டவேண்டாமா!

"பரிவு......நண்பர்களே! இளம் பிஞ்சு போன்ற இந்தச் சிறுவனை அருவருப்போடு சற்றுமுன் பழித்துப் பேசியதையும், அதற்குப் பிறகு ஏதோ கொஞ்சம் வீசிவிட்டுப் பிச்சைத் தொழிலுக்குச் சாசுவதத்தை அளித்ததையும் நானறிவேன். ஆனால் எல்லோருமே ஒன்றை மறந்துவிட்டீர்கள். அவனும் இந்த நாட்டில் பிறந்தவன் தானே. அவனுக்கு ஏன் இந்தப் பிணி? என்று யாராவது எப்போதாவது நினைத்திருக்கிறோமா? உடலில் உள்ள புண்ணைப் போக்க நாம் எவ்வளவு தீவிரம் காட்டுகிறோம். நாட்டிற்கே பீடித்திருக்கும் இந்தப் புரையோடிப்போன புண்ணைக் களைவது அதிமுக்கியமல்லவா! கடமையல்லவா! இதே நிலையில் சென்றால் நாம் என்றைக்குதான் சரிநிகர் சமானமாக வாழ்வது?

அந்த மனிதர் முகத்தில் கம்பீரமும், அதே சமயத்தில் சஞ்சலமும் பின்னிப் பரவியிருந்தன.

"அதெப்படி எல்லோரும் ஒன்றாக முடியும்? அவனவன் தலையெழுத்துப்படிதான் நடக்கும். அதைப்போய் மாற்ற நினைப்பது பகலவனைத் திசை திருப்ப முயலுவது போலாகும்."

ஏக போகக்காரர், தான், தத்துவத்தில் 'புலி' என்பதை இலாவகமாக வெளிப்படுத்திவிட்டார்.

"பிரச்சினையைக் கை கழுவி விடுவதற்கு நமக்கெல்லாம் இந்தத் தலையெழுத்து கைவந்த சாதனமாகிவிட்டது. ஆனால் இந்தச் சிறுவனுக்கு நல்ல சூழ்நிலை கொடுத்து வளர்த்தோமானால், கண்டிப்பாக இவன் எதிர்காலத்தில் சிறந்த அறிஞனாக, பொறியியல் வல்லுனனாக ஆகலாம். அப்படிப்பட்ட இந்தச் சிறுவனை— இவனைப் போன்ற எண்ணற்றோரை பிஞ்சிலேயே வெதும்பிக் கருகிப் போகச் செய்வது நாட்டிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பல்லவா! இதனைச் சிந்திக்காமல் ஒரு காலணாவால் முற்றுப்புள்ளி வைத்துவிடுவது அவர்களைமெல்லாம் வஞ்சித்தது போலல்லவா ஆகும்!!—அந்த மனிதர் சாந்தமாக, ஆனால் வேதனையால் வெளிப்படும் உணர்வோடு மொழிந்தார்.

அவரது பேச்சைப் புரிந்து கொண்ட சிலர், இந்த ஆள் 'ஒரு மாதிரி' போல இருக்கு என்று முணுமுணுத்துக் கொண்டனர். "வீதியில் போகிறவனுக்கெல்லாம் காரணம் கண்டு கொண்டிருந்தால் நம்முடை பிள்ளை குட்டிகளின் கதி என்ன ஆவது? அதுவும் நமக்கெதற்கு இந்த வெட்டி வேலையெல்லாம்"?—சுயநலத்தின் உச்சாணிக் கிளையிலிருந்து அவர்களுடைய வார்த்தைச் சருகுகள் உதிர்ந்தன.

"ஊம்.........இந்த நாட்டின் இந்த இரங்கத்தக்க நிலை என்றைக்குதான் விடியப்போகிறதோ?" அலுப்புச் சலிப்போடு அந்த மனிதர் கூறினார்.

"நீர் விடிய வைக்கிறதுதானே! யார் கையைப் பிடித்துத் தடுத்தாங்க? காலணாக் கொடுக்காமல் தட்டிக் கழிப்பதற்கு எதை எதையோ பேசுகிறீர்களே!"—நையாண்டிக் குரல்கள் அவர் செவியை கர்ணகடூரமாகத் தாக்கின.

அவர் உள்ளம் கருவியது; கனன்றது; உடல் பதறித் துடித்தது. ஆனால் அவர் அறிவு பொறு...பொறு...என்று அடக்கியது. எனவே மேலும் அவர் பேசவில்லை.

இரயில் தன் கரங்களைத் தாவிக் கொண்டு அடுத்த நிலையத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்த மனிதர் பிச்சைக்காரச் சிறுவனை அருகில் அழைத்தார். "தம்பி! பள்ளிக்கூடம் சென்று படிக்க உனக்கு விருப்பமா" என்று கனிந்த குரலில் கேட்டார்.

சிறுவனின் முகம் ஆச்சரியமும் உவகையும் குழைந்து பொலிந்தது.

"ஐந்து ஆண்டுகளுக்கு முன்னே முதலாவது படிச்சிருக்கிறேன் ஐயா. அப்பவே உபாத்தியாயர் என்னைக் கெட்டிக்காரன் என்று சொல்லி இருக்கிறார். அப்பா, அம்மா செத்திட்டதாலே நான் படிக்க முடியாமல் போயிற்று. இப்போகூட யாராவது படிக்க வச்சாங்கன்னா நல்லாப் படிப்பேன் ஐயா"

கற்கவேண்டுமென்ற தணியாத ஆவல் அவன் நெஞ்சில் நிறைந்து வழிந்து வெளிப்பட்டது. கண்களிலோ உருக்கமான வேதனை அரும்பி நின்றது.

எத்தனை இளம் நெஞ்சங்கள் இவனைப்போல் ஏங்கித்தவிக்கின்றனவோ? வக்கற்ற நிலையை எண்ணி வெதும்புகின்றனவோ? நினைத்தாலே உள்ளம் குமுறுகிறது; அழுது புலம்பி அரற்றுகிறது.

என்ன செய்வது? பொறுப்புள்ள மனிதர்களின் விழிகள் இவர்களைப் போன்ற ஏழைகளை ஏறெடுத்துப் பார்க்க மறுக்கின்றனவே!

புகைவண்டி, அந்த நிலையத்தில் தங்கிக் களைப்பாற்றிக்கொள்ள நின்றது. அந்த மனிதர் இறங்கி[னா]ர், தனியாக அல்ல; சிறுவனோ[டு]தான்.

இறங்கிய சிறுவன் என்ன நினைத்துக்கொண்டானோ, மீண்டும் பெட்டியினுள் நுழைந்தான. "இ[ந்]தாங்க உங்க காசு" என்று கூறிய வாறு கையிலிருந்ததைப் பெ[ஞ்]சின்மீது வைத்துவிட்டு மின் வெட்டு நேரத்தில் கீழே இறங்[கி]க் கொண்டான்.

காசுக் குவியல் உட்கார்ந்திரு[ந்த] வர்களைப் பார்த்து நகைத்த[து]. ஏனோ உட்கார்ந்திருந்தவர்களின் கண்கள் கூசிச் சுருங்கின. கேவல[ம்] காலணாவைக் கொடுத்துத் தங்க[ள்] தர்மக் கணக்கை முடித்து[க்] கொண்ட அவர்களுக்குப் பை[யனு]டைய பண்பு சரியான சவுக்[கடி]யைக் கொடுத்தது. அந்த மனி[த]ரின் செய்கையோ அவர்களை அ[வ]மானக் கிடங்கில் கழுத்தைப் பி[டி]த்துத் தள்ளியது.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டப்பட்டு வெளியிடப்படுகிறது.